விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 18 துல்ஹஸ்தா 5 இதழ் 131

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 2-7-1987



யாழ். நகரில் நேற்றுக் காலை நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மாணவ, மாணவிகள் சுலோக அட்டைகள் சகிதம் செல்வதை படத்தில் காணலாம்

● சகல இராணுவ நடவடிக்கைகளையும் ஆட்சேபித்து

# யாழ்நகரில் மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(மு. வாமதேவன்)

யாழ் குடாநாட்டில் படையினரால் பேற்கொள்ளப்பட்டு வரும் சகல விதமான இராணுவ நடவடிக்கைகளையும் ஆட்சேபித்து கல்லூரி மாணவர்கள் ஒன்றிணைந்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊாவல மொன்றை நேற்று நடத்தினர்கள்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து 'மாணவ முன்னணி' சில நிபந்தனைகளை முன் வைத்து மகஜர் ஒன்றையும் பிரதம கல்வி அதிகாரியிடம் கையளித்தது

யாழ், குடாநாட்டுப் பாடசாலை மாணவாகள் பல்லாயிரக்கணக்கில் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள்.

யாழ் பல்கலைக்கழக முன்றலில் இருந்து நேற்றுக்காலை 11 மணிகசு ஆரம்பமான இந்த ஊர்வலம் யாழ் கல்வித்திணைக்களத்தை வந்தடைய சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை எடுத்தது.

சுமார் மூன்றுமைல் நீளமான இந்த ஊர்வலம், சேர். பொன் இராமநாதன் வீதி, பலாலி துறை வீதி, செம்மணி வீதி வீதி, அரசடி வீதி, பருத்தித் (8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் 201 ஆயுதப்படை முகாம்கள்!

யாழ்ப்பாணம், வியா

வடக்கு கிழக்கு மாகாணங்களில், வடமராட்சி 'லிபரேசன் ஒபிரேஷனின்' போது அமைக்கப்பட்ட இராணுவமுகாம்களைத்தவிர இருநூற்றியொரு ஆயுதப்படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(5ம் பக்கம் பார்க்க)

## படையினரால் கைதான ஆசிரியர்கள், மாணவர்களை விடுவிக்குமாறு மகஜர்

[நமது நிருபர்]

"படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழ் மாணவர்களையும் ஆசிரியர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும்".

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை மாணவ முன்னணி

(5-ம் பக்கம் பார்க்க)

"கல்வி அமைச்சினுல் நடத்தப்படும்

## சகல பரீட்சைகளையும் பகிஷ்கரிக்கவேண்டும்'

(அலுவலக நிருபர்)

"சிறிலங்கா இராணுவத்தினரால் வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் ஒன்றும் புதுமையானவையல்ல தமிழ் மக்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இராணுவத் தாக்குதல்களை மேற்கொண்டு தமிழ் மக்களை அழிதொழிக்க அரசு [5ம் பக்கம் பார்க்க]

## சென்னையில் ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் நடத்த தடை

(சென்னை)

சென்னை நகரில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றிற்கு தடை விதிக்கப்பட் [8ம் பக்கம் பார்க்க]

## இந்திய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளின் நடவடிக்கை கொழும்பில்தவருனபிரசாரம்

(நமது நிருபர்)

இந்திய நிவாரனப்பொருள்களை விநியோகிப்பதை பார்வையிட வந்துள்ள இந்திய செஞ்சிலுவைச சங்கத்தினர் தீவிரவாதிகளின் ஆதரவோடு குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களைச் சந்தித்துச் சேகரிக்கும் விபரங்கள் உலக மக்களின்முன் சமர்ப்பிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் அவ்வாறு நடக்குமானல் வடக்கில் உள்ள தற்போதைய பிரச்னை மேலும் மோசமடைவதற்கு வழிவகுக்கும் என்றும் 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்


(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் போர் நிகழாது; இனிமேல் சமாதானம் நிலவும்' –குப்தா நம்பிக்கை

(என். கே. துரைசிங்கம்)

"யாழ்ப்பாணத்தில் இனிமேல் போர் நடைபெறமாட்டாது. தொடர்ந்து சமாதானம் நிலவும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்" இவ்வாறு இந்தியத் தூதரக பாதுகாப்பு அதிகாரி காப்டன் குப்தா நேற்று பத்திரிகையாளர்களுடன் பேசுகையில் நம்பிக்கை தெரிவித்தார்.

இரண்டாவது தடவையாக இந்திய நிவாரணப் பொருள்களுடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்த 'பொறுசகா' கப்பலில் உணவுப் பொருள் இறக்குவதனை (5-ம் பக்கம் பார்க்க) (5ம் பக்கம் பார்க்க)



மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைத் தொடர்ந்து யாழ் கல்வித் திணைக்கள முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர் ஒருவர் உரையாற்றுவதையும், அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Love Birds 30 சோடி 2 தட்டு கூட்டுடன் விற்பனைக்குண்டு. T. ஈஸ்வரன், 3ம் கட்டை, K. K S Road, Unikco Computer Centre லேன், கொக்குவில். சி-9612

காராம் இனப்பசுமாடும் கன்றும் விற்பனைக்குண்டு. இல. 7, கைலாசபிள்ளையார் கோவில், மேற்கு வீதி, நல்லூர். சி-9620

தமிழ் "Remington18'' ஆங்கிலம் (Olympia Optima) தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. Fudo Enterprises, Jaffna Road, Manipay. சி 9658

நஷனல், "சொனி T. V. கமரா மற்றும் வீடியோ படப்பிடிப்பிற்குரிய சாதனங்கள் விற்பனைக்குண்டு. கி. வீ. போட்டோ, 380, ஆஸ்பத்திரி வீதி, (ஸ்டேசன் சந்தி) யாழ்ப்பாணம். சி-9650

பிறிமா கோழித்தீன் வகைகள், கோழிகளுக்கு தீன். தண்ணீர் வைக்கும் பிளாஸ்ரிக் உபகரணங்கள். இறக்குமதி செய்யப்பட்ட வளர்ப்புமீன் உணவுகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா பிறதர்ஸ், 660, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சி-9626

பன்னிரு திருமுறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருப்பாடல்களின் திருமுறைத் திரட்டு, யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக் கழகத்தின் 22ஆவது வெளியீடு. கைக்கு அடக்கமான கவர்ச்சியான நூல், யாழ் நகரில் உள்ள சகலமுன்னணி புத்தகசாலைகளிலும் விற்பனைக்குண்டு. விலைரூபா 12-00. செட்டியார் பதிப்பகம், 411/1, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். சி-9651

மானிப்பாய் பட்டினஎல்லைக்குள் உடுவில் வீதி றேஸ்றொபிக் கம்பனிக்கருகில் வீட்டுக்காணி 5 பரப்பு, வேறாக, 1½ பரப்பு, வேறாக. கிணற்று வசதியுடன், 3½ பரப்பு வீடு வேறாக விற்பனைக்குண்டு. மானிப்பாய் பட்டின சபை இலிகிதர் மா. இராசரத்தினத்துடன் தொடர்பு கொள்ளவும். (சி 9624)

16 போத்தலுக்குமேல் பால் திறன்கூடிய நல்ல 'ஜெய்சி' இன முறையே 8, 7 மாத கன்றுத்தாச்சி பசுக்களும் சினைக்கு விடக்கூடிய 'ஜெய்சி' இன காளையும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: சி. துரைராசா, காளுவன் விக்டோரியா கல்லூரிக்கு அருகில், சுளிபுரம் மத்தி, சுளிபுரம். சி-9630

ஒகஸ்ட் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் உதவி ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி. "பொதுஅறிவு பொதுஉளச்சார்பு'' புதிய பதிப்பு 1984, 87 ஆண்டு வினா விடைத்தாள்களையும் உள்ளடக்கியது. விலை ரூபா 49-50, பூபாலசிங்கம்புத்தகசாலை, சிறிலங்கா புத்தகசாலை, சுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப் பெறவிரும்பின் அஸ்ரன்இன்ஸ்ரிரியூட் 101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சி-9554

## தேவை

பெண்விற்பனையாளர்உடன் தேவை. ஆங்கில அறிவு உள்ளவராகவும், கேக், ஐசிங், செய்யக் கூடியவராகவும், யாழ் ரவுண் எல்லைக்குள் வசிப்பவராகவும் இருக்கவேண்டும். தொடர்பு; Malayan Bake House and Stores, 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி-9627

"கலர் பிறின்டிங்'' செய்வதில் நன்கு அநுபவமுள்ளவர் உடன் தேவை. தொடர்பு கொள்க:- K. சிறிதர் (உஷன்) கே. கே. எஸ் வீதி இணுவில் (கோயில் வாசலுக்கு அண்மையில்). சி 9623)

## வகுப்புக்கள்

1988, G.C.E. O/L ஆங்கிலப் பரீட்சை. புதிய பாடத்திட்டம். Year 8, 9, 10 ஆங்கிலப் பாடப் புத்தகங்களின அடிப்படையில் வகுப்புக்கள் ஆரம்பம். தொடர்புகொள்க: S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (சி-9522)

ஆகஸ்ட் 16ம் திகதி நடைபெறவிருக்கும் ஆசிரியர்தெரிவு போட்டிப் பரீட்சைக்கான 1 மாதகால துரிதபயிற்சிவகுப்புக்கள் ஆரம்பம்: 11-07-87 பாடநெறி, பொது அறிவும் பொதுஉளச்சார்பும் பல ஆசிரியர்களின் இணைந்த சேவை. கட்டணம் ரூபா 100/- மட்டுமே. தொடர்பு: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், 101/10, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி-107]

## வாடகைக்கு

வட்டுக்கோட்டைப் பகுதியில் சகல வசதிகளுடனும் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். சிறியகுடும்பம் விரும்பத்தக்கது விளம்பர இலக்கம் சி-9625, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-9625

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**
**முழுநேரக் கல்விப்பட்டப்பின் டிப்புளோமா**
**கற்கைநெறி 1987/88**

## புதிய அனுமதி

பட்டம் பெற்றபின் மூன்றுண்டுகால ஆசிரியர் சேவை அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன தேர்வு நாடிகள் 31.07.1987-இல் 50 வயதிற்குக் குறைந்தவர்களாய் இருத்தல வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் 10/- செலுத்திய பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, சிரேட்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்தும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

விண்ணப்பங்களைசிரேட்ட உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 31 07.87ந் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
30.06 1987 [ஏ 116]

வ. சி. சுந்தாலிங்கம்
ஜே பி. யு. எம்.
சட்டத்தரணியும்
நொத்தாரிசுவும்
கிளிநொச்சி.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

சுவாம்பிள்ளை அல்லது சிவம்பிள்ளை கொர்னேலியஸ் நல்லையா கைம்பெண் ஹெலன் நேசம் அவர்களின் மரணசாதனம் பற்றிய விடயத்தில்

மரணித்தவர்

செல்லையா இராசையா,
டி/7. பூல் வீதி,
கிளிநொச்சி.

மனுதார்

இல. தத்துவம்/T 249

எதிர்

1. செல்லையா இராசையா மான் அன்ரன் ஜெயராசா, டி/7, பூல் வீதி, கிளிநொச்சி.
2. நவரத்தினம் மகள் லீலா, ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி.
3. நவரத்தினம் மகன் இம்மானுவேல் நிக்கலஸ், ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி.
4. நவரத்தினம் மகன் கொர்னேலியஸ் றெபேட் அன்ரன், ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி.
5. செல்லையா இராசையா பெண் ஜெயமணி, டி/7, பூல் வீதி, கிளிநொச்சி.

எதிர்வாதிகள்.

மேற்படி மரணமெய்தியவரின் மரணசாதனம் நிரூபிக்கப் படுவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட இலக்கம்கொண்ட தத்துவ வழக்கு மேற்படி மன்றில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றதென்றும் அவ்வழக்கில் பின்னுறுதிக்கட்டளை இடப்பட்டிருக்கின்றதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

மேற்படி பின்னுறுதிக் கட்டளை ஏன் இறுதிக்கட்டளை ஆக்கப்படாதென காரணம் ஏதேனும் இருப்பின், அவர் இம்மன்றில் 1987ம் ஆண்டு ஆவணி மாதம் 17ம் திகதி முற்பகல் 9-00 மணிக்குத்தோன்றி அத்தகைய காரணம் காட்டவேண்டும் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.


1987ம் ஆண்டு ஆனி மாதம் 22/26ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆ. குணநாயகம்,
பதிவாளர்
சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்.

வரைவு:
வீ. எஸ்.சுந்தரலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி
[சி-9621]

## 9-ம் வருட நினைவஞ்சலி



திரு. V. இராமலிங்கம்
மலர்வு; 1-1-1944
உதிர்வு: 2- 7- 1978

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மச்சான், மச்சாள், அண்ணர், உறவினர்.

விஜயகுலநாயகி
(யாலினி),
மறவன்புலோ,
சாவகச்சேரி.
(சி- 118)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை
நடராஜபிள்ளை
மலர்வு: 10- 11- 1934
உதிர்வு 02- 06- 1987

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து நாட்கள் 30 உருண்டோடி விட்டாலும் எங்கள் உள்ளங்களைவிட்டு 'நீங்கள் அகலவேயில்லை. உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அணையாத தீபமாக என்றும் ஒளிவீசும் என்று உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.
'நந்தஸ்தன்',
இடைக்காடு.
[சி-9655]

## A/L 89 கணித மாணவர்கட்கு

திரு. வெக்டர் வேலாயுதம் ஆசிரியரினது தூய/பிரயோக கணித வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

11-07-87 காலை 10-30 Sat & Sun 10 30 — 12.30

மணல்தரை லேன், திருநெல்வேலி.
[சி 9656]

## வெற்றிடம்

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவிலில்கணக்காளர் பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் கோவில் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். மேலும் விபரங்கள் பெற விரும்புவோர் அறங்காவலர் சபைத் தலைவர் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(தலைவர் அறங்காவலர் சபை, பொதுசனத் தொடர்பு அதிகாரி காரியாலயம், கச்சேரி, யாழ்ப்பாணம்.)

இங்ஙனம்
ஆ. தியாகராசா
கௌரவ செயலாளர்.
[சி 119]

## தலா ஆயிரம் ரூபா

(பண்டத்தரிப்பு நிருபர்)

கிளிநொச்சியில் மீண்டும் சென்று குடியேறியவர்களுக்கு குடும்பத்திற்கு தலா ஆயிரம் ரூபா வீதம் புனர்வாழ்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் சென்று மீண்டும் தங்கள் வீடுகளில் குடியேறிய குடும்பங்களுக்கு கிளிநொச்சி கச்சேரியில் வைத்து கிளிநொச்சிஅரசாங்க அதிபரினால் மேற்படி ஆயிரம் ரூபா பணம் கையளிக்கப்பட்டது.

சுன்னாகம் பல நோ.கூ. சங்கம் (வரையறுள்ளது) சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தில் 4000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூ 250/- ஐசங்கத்தில்செலுத்தி, கேள்விப் பத்திரத்தைச் சங்க வேலைநாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

11-07-87 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பொதுமுகாமையாளர்.**
சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். (எ-121)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தொ. யூட்மரீனா- றூஜி
மலர்வு: 08-08-19 8
உதிர்வு: 02-06-1987

பரமன் யேசுவையே-
அயலவரில் கண்டு-நீ
வாழ்ந்திருந்தாய்
பழையவரைக் கண்டு
விட்டால் உள்ளன்
புடன்- நீ உபசரிப்
பாய்
பள்ளியிலே படிக்கை
யிலே பலரை-நீ
கவர்ந்திருந்தாய்
பகைவர்களைப் பார்
த்து விட்டால் புன்
சிரிப்பால்-நீ
அரவணைப்பாய்
பத்தரை மாற்றுதங்க
மென பத்தொன்
பதுவரை நீ,
வளர்ந்தாய்
பூத்தமலர் நீ பாதியிலே
உதிர்ந்துவிட்டதால்
பாசமிகு கொடிகள்
நாம் பாரினிலே
பதைபதைக்கின்
றோம்.
பாருக்குள் மறைய
வில்லை-நீ
பரமன் அடிசேர்ந்து
விட்டாய்யம்மா.

உன்பிரிவால் துயருறும், தந்தை, தாய், சகோதரர்கள் உற்றார், உறவினர், நண்பர்கள்.

சா. தொமியாஸ்
(மாசில்லாமணி),
3-ம் வட்டாரம்,
மண்டைதீவு.
(சி-9639)

# பாதுகாப்புச்சபை அனுமதி அளித்தால்

# வளைகுடாவில் ஐ. நா. கடற்படை அணி!

## செயலாளர் நாயகம் கூறுகிறார்

நியூயோர்க், ஜூலை—1

பாரசீக வளைகுடாவில் கப்பல்களுக்குப் பாதுகாப்பளிக்க ஐ.நா. கொடிகளுடன் கடற்படை அணியொன்றை அப்பிரதேசத்தில் நிலை கொள்ளச் செய்ய ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்குமென ஐ நா. செயலாளர் நாயகம் திரு. பெரஸ்டி கியூலர் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. கடற்படை அணியை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அனுமதி அளிக்கவேண்டும். அனுமதி கிடைத்தால் மட்டும் இது சாத்தியமாகுமென்றும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

### அமெரிக்கா அறிவிப்பு

இதேவேளையில் வளைகுடாவில் குவெய்த் எண்ணெய்க் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதென்ற தமது முன்னைய முடிவைத் தாம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

வளைகுடாவிலுள்ள அமெரிக்க நேச நாடுகளுக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்குடனேயே மேற்கண்ட முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு ஜோர்ஜ் ஷுல்ஸ் தெரிவித்தார்.

வளைகுடாவில் குவெய்த்தின் சரக்குக் கப்பலொன்றை ஈரானிய ஏவுகணை ஒன்று தாக்கிய சில மணி நேரத்தின் பின்னரே வெள்ளைமாளிகை மேற்கண்ட அறிவித்தலை வெளியிட்டது.

உலகச் செய்திகள்

## 5 ஆண்டுகள் விபத்தின்றி சேவை

சென்னை, ஜூலை 1

5 ஆண்டுகள் விபத்துகளின்றிக் கடமையாற்றிக் தமிழ் நாடு பல்லவன் போக்குவரத்துக்கழகத்தைச் சேர்ந்த 79 பஸ் சாரதிகளின் சேவையைப் பாராட்டிய தமிழக போக்குவரத்து அமைச்சர் திரு. எஸ். முத்துச்சாமி தங்கப்பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்.

## அகதிகளை நடுக்கடலில்விட்டு படகோட்டி தப்ப முயற்சி!

### பயணிகள் மடக்கிப் பிடித்தனர்

(அச்சுவேலி நிருபர்)

தமிழகத்திற்கு அகதிகளை ஏற்றிச் சென்ற படகொன்று இடைநடுவில் பழுதடைந்ததையடுத்து பயணிகளை அநாதரவாகவிட்டுத் தப்பமுயன்ற படகோட்டியை பயணிகள் மடக்கிப்பிடித்து உயிர்தப்பினர்.

வேலணைத் துறையிலிருந்து தமிழ்நாட்டை நோக்கி 30க்கும் மேற்பட்ட அகதிகளை ஏற்றிச் சென்ற படகு நடுக்கடலில் ஓட்டையாகி நீர் புகத்தொடங்கியது. இதனை அவதானித்த படகோட்டிகளில் ஒருவர் படகைக் காப்பாற்ற முடியாது என்ற நிலையில் நீரில் குதித்து நீந்தத் தொடங்கினர் மற்றப் படகோட்டியும் நீரில் குதிப்பதற்கு எத்தனித்தபோது பிரயாணிகள் படகோட்டியை மடக்கிப் பிடித்து குதிக்கவிடாமற் தடுத்து நீரை அள்ளியூற்றி உயிர்ச் சேதமின்றிக் கரை சேர்ந்தனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சில குடும்பங்களுட்பட 30க்கு மேற்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு தமிழ்நாட்டிற்குச் சென்றுகொண்டிருந்த மேற்படி படகில் பிரயாணம் செய்தவர்களுக்கே இத்திகில் அனுபவம் ஏற்பட்டது.

படகு கரைக்கு வந்ததும் அதில் பிரயாணம்செய்தவர்கள் படகிலிருந்த முக்கிய இயந்திர சாதனங்களைக் கழற்றித் தாங்கள் செலுத்திய படகுக் கட்டணத்திற்குப் பிணையாக எடுத்துக்கொண்டு தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர். [சி]

## இந்திய ஜனாதிபதி தேர்தல்———

## அஸாம் ஆளும்கட்சி கிருஷ்ண ஐயருக்கு ஆதரவு

புதுடில்லி ஜூலை-1

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகள் தரப்பில் போட்டியிடும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு வி ஆர். கிருஷ்ண ஐயருக்கு ஆதரவளிப்பதற்கு அஸாம் ஆளும் கட்சி தீர்மானித்துள்ளது.

அஸாம் கணபரிஷத்தின் லோகசபை, ராஜ்யசபை, சட்டசபை உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதுடில்லியில் எல்லைக்காந்தி

புதுடில்லி, ஜூலை 1

எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கான் நேற்று பம்பாயிலிருந்து புதுடில்லி சென்றபோது பாலம் விமானநிலையத்தில்பிரதமர்திரு ராஜீவ்காந்தி, வெளியுறவு அமைச்சர் திரு என். டி திவாரி உட்பட பல அமைச்சர்களும் அதிகாரிகளும் வரவேற்றனர்.

சுகவீனமுற்று ஆபத்தான நிலையில் பம்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றபின்னர் எல்லைக்காந்தி புதுடில்லி வந்துள்ளார்.

## 10-வது கிரகம் பூமியை வலம் வருகிறது?

### சாத்தியம் குறித்து அமெரிக்க விஞ்ஞானிகள்

வாஷிங்டன், ஜூலை 1

வியாழன் கிரகத்துக்கு அப்பால் 10-வது கிரகம் ஒன்று இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது அதிகரித்துவருவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

"பயனியர்-10", பயனியர்-11" ஆகிய இரு விண்கலங்களும் அண்டவெளியில் நடத்திய ஆய்வுகளின்போதே இவ்வாறு சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளதாக அமெரிக்க தேசிய விண்வெளி ஆய்வு நிலையம்தெரிவித்துள்ளது.

பூமியைவிட ஐந்து மடங்கு பெரிய கிரகம் ஒன்று பூமியை வலம் வந்துகொண்டிருக்கின்றது என்பதை இந்த ஆய்வுகள் மூலம் நம்பக்கூடியதாக இருக்கிறது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## ஒய்வுபெற்றார்

(அச்சுவேலி நிருபர்)

அச்சுவேலி கிராமசேவையாளராக பல வருடங்கள் கடமையாற்றிய திரு. கே. சோமசுந்தரம் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

## நான்காவது மகாநாடு

(மண்டைதீவு)

உலகத்தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் 4-வது மகாநாடு ஆகஸ்ட் மாதம் 29, 30, 31-ம் திகதிகளில் கோலாலம்பூரில் நடக்கவிருப்பதாக இக்கழகம் சகல கிளைகளுக்கும் அறிவித்துள்ளது. மூன்று தினங்கள் நடைபெறும் இம்மகாநாடு கோலாலம்பூர் செந்தூர்செட்டியார் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## தமிழ்ப்பிரதேசங்களில்———

## நாம் பாதுகாப்பாக வாழ உடன் ஆவன செய்யவும்

(மாவிட்டபுரம் நிருபர்)

"தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் அமைதி நிலையை நோற்றுவித்து கலைஞர்களாகிய நாம் பாதுகாப்புடனும் சுதந்திரமாகவும் வாழ உடன் ஆவன செய்யவும்."

இவ்வாறு இந்திய உயர் ஸ்தானிகரைக் கோரும் மகஜர் ஒன்றை இலங்கை இசைவேளாளர்சங்கம் இந்திய பிரதிநிதி கப்டன் குப்தாவிடம் கையளித்துள்ளது.

மேற்படி சங்கத்தலைவர் திரு. என். ஆர். சின்னராசா செயலாளர் திரு எஸ் ஆர். ஞானசுந்தரம், நாதஸ்வரவித்துவான் திரு. கே பஞ்சமூர்த்தி ஆகியோரைக் கொண்ட குழு ஞானம்ஸ் ஹோட்டலில் வைத்து கப்டன குப்தாவை நேரில் சந்தித்து இம்மகஜரை கையளித்தது.

இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1977ம் ஆண்டு முதல் பகுதிகளில் நிலைமை மோசமடைந்து கலைஞர்களாகிய எமது நிலையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பகுதிகளில் 2500 பேர் வரை நாதஸ்வர தவில் கலைஞர்கள் உள்ளனர் மேலும் 12 ஆயிரம் பேர் வரை இவர்களது குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தற்போது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் உள்ளனர். ஆலய உற்சவங்கள் மற்றும் வைபவங்கள் எதுவும் நடைபெறுமையால் தொழில் பாதிக்கப்பட்டு வாழ்க்கையைநடத்த முடியாமல் கஷ்டமுறுகிறார்கள். பலர் அகதிகளாக வேறு இடங்களுக்குச் சென்று கஷ்டமுறுகிறார்கள்.

ஆகவே இங்கு அமைதியான சூழ்நிலையை விரைவில் நோற்றுவித்து கலைஞர்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் தமது அன்றாட வாழ்க்கையை நடத்த ஆவன செய்யுமாறு கோருகிறோம்.

## அதிகரிப்பு

(ஒட்டுசுட்டான் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 26 கிராமசேவையாளர் பிரிவுகள் இயங்கி வந்தன.

தற்போது இம் மாவட்டம் 51 கி சே பிரிவுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றும் திருமதி. வனிதா சிவராசா இம் மாதம் முதல் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ஐ. நாவில் உரை நிகழ்த்த சோவியத் தலைவருக்கு அழைப்பு

மாஸ்கோ, ஜூலை 1

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றுமாறு சோவியத் தலைவர் திரு மிகேல் கொர்பச்சேவுக்கு ஐ. நா. செயலாளர்நாயகம் திரு. பெரஸ் டி கியூலர் அழைப்பு விடுத்துள்ளார்.

மாஸ்கோவில் திரு. கொர்பச்சேவுடன் பேச்சு நடத்திய போதே ஐ நா. செயலாளர் நாயகம் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இந்த அழைப்புக்கு திரு. கொர்பச்சேவ் இன்னமும் பதில் அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை போன்ற உயர் மன்றங்களில் சோவியத்தின் கருத்துக்கள் வெளியிடப்படவேண்டும் என்று தாம் கருதுவதாக திரு. கியூலர் தெரிவித்தார்.

## உலக வங்கி எச்சரிக்கை

லண்டன், ஜூலை 1

உலக பொருளாதாரம் மந்த நிலை அடைந்துள்ளதென உலக வங்கி உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## தீவுப்பகுதியில் பதற்றம்

(புங்குடுதீவு நிருபர்)

புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, மண்டைதீவு, பாலைதீவு ஆகிய கடலோரப்பகுதிகளில் கடந்த சில நாட்களாக இரவுநேர ரோந்துச்சேவையில் ஹெலிகாப்டர் ஒன்று ஈடுபட்டுவருகிறது.

இந்த இரவுநேர ரோந்தில் ஈடுபட்டுவரும் ஹெலிகாப்டர் புங்குடுதீவு, கோரியாஅடி கடல்பகுதியில் நங்கூரமிட்டுள்ள பாரிய கடற்படைக் கப்பலில இரவுநேரம் தரித்து நின்று அதிகாலையில் மண்டைதீவுப் பக்கமாகச் சென்றுவருகிறது.

இந்த ஹெலியின் இரவு நேர நோட்டத்தால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## துர்க்கை அம்மன் விக்கிரகம்

(சுழிபுரம் நிருபர்)

சிங்கவாகனத்தில் அமர்ந்திருக்கும் பத்துக் கைகளையுடைய அரையடி உயரமான துர்க்கையம்பாள் விக்கிரகம் ஒன்று வழக்கம்பரை அம்பாள் ஆலய முன் மண்டபத்தில் உள்ள மணற்குவியலில் கடதாசியில் சுற்றியவாறு கிடக்கக் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## இந்திய உணவுப் பொருள்

மாவிட்டபுரம், பதன் மல்லாகம் பஸ் டிப்போவில் தங்கியுள்ள அகதிக்குடும்பங்களுக்கு கடந்த சனியன்று இந்திய நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

காங்கேசன்துறை ஊறணி, பழை, வீமன்காமம் பகுதிகளைச் சேர்ந்த மேற்படி அகதிக் குடும்பங்களுக்கு மாவு, சீனி, தீப்பெட்டி. மைசூர்ப் பருப்பு, மண்ணெய் போன்ற பொருள்கள் வழங்கப்பட்டன.

இவ் வைபவத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்திய அதிகாரிகளுக்கு வரவேற்பளிக்கு முகமாக மல்லாகம் பகுதியெங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தது பல ஆயிரக் கணக்கான மக்கள் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

**மணிவாக்கு**

எவன் எதை உபாசிக்கிறானோ அவன் அதை அடைகிறான்.

—பிருகதாரண்ய உபநிடதம்

## நமது நோக்கு

### ஆற்றேடு கோபமென்றால் நீர் குடிக்காமல் இருப்பதா?

ஆற்றேடு கோபித்துக் கொண்ட ஒருவன் தண்ணீர் குடிப்பதையே நிறுத்திவிட யோசித்தாலும்!

இந்தியாவில் உற்பத்தியாகும் மருந்துவகைகளையும், மருத்துவப் பொருள்களையும் இறக்குமதி செய்வதைக் கைவிடும்படி இலங்கை சுயாதீன மருத்துவர்கள் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையானது மேலே குறித்த விசித்திரப் பேர்வழியைத்தான் நமக்கு நினைவூட்டுகின்றது.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு விமானங்கள்மூலம் உணவுப் பொருள்களைக் கொண்டுவந்து போட்டதற்கு இந்திய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே இந்தச் சங்கம் இப்படியான ஒரு நடவடிக்கையை எடுக்கும்படி இலங்கை மருந்துப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியாவிலிருந்து மருந்துப் பொருள்கள் மாத்திரமா இங்கு வருகின்றன? வந்துள்ளன?

மருந்து என்பது ஒரு உயிர் காக்கும் பொருள். இந்த உயிர் காக்கும் பொருளை உயிரைப் போக்கும் நஞ்சைக் கொண்டும் தயாரிக்கிறார்கள். அப்படியிருக்க இந்தியா ஒரு பகை நாடாக இருந்தால்கூட அங்கிருந்து கிடைக்கும் மருந்தின் தன்மை மாறிவிடப் போவதில்லை.

மருத்துவர்களின் சங்கம் இந்திய அரசின் சில நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அது ஒரு ஜனநாயக அமைப்பு என்ற முறையில் வேறு எத்தனையோ வழிகள் உண்டு. ஆனால் இந்நாட்டு மக்களின் தேவைகளில் ஒன்றான மருந்து இறக்குமதியை நிறுத்தும்படியோ, அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டிலிருந்து இறக்குமதி செய்யக் கூடாதென்று வற்புறுத்தவோ உரிமை இருப்பதாகக் கருத முடியாது.

இந்திய மருந்துகள் தரத்தில் குறைந்தவை, அல்லது பாவனைக்கு உதவாதவை, அல்லது பக்க விளைவுகளுக்கு இடங்கொடுப்பவை என்ன போன்ற காரணங்கள் இருப்பின் அதன்மீது ஆதாரத்தோடு மருத்துவர்கள் சங்கம் எடுத்துக் கூறுமானால் பொருத்தமாய் இருக்கும். மருத்துவர் சங்கத்துக்குச் சம்பந்தமே இல்லாத ஒரு விடயத்தில் இது ஏன் தலையிடுகின்றது என்பது புரியவில்லை.

இலங்கைக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்யும்படி இந்தியாவில் ஏற்கனவே ஒரு கோரிக்கை இருந்துவருகின்றது. இரு நாடுகளுக்குமிடையில் அரசியல் உறவு நிலையைச் சீர்குலைக்க விரும்பாத இந்திய அரசு இந்தக்கோரிக்கையை மறுதலித்து வருகின்றது.

ஏன், இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைப் போட்டது குறித்து இலங்கை அரசு ஆத்திரமும் கோபமும் கொண்டுள்ள போதிலும் இரு நாட்டு உறவு நிலையில் பாதிப்பு ஏற்படும் விதத்தில் இன்னமும் நேரடியாக எதுவும் செய்துவிடவில்லையே? அப்படிச் செய்துகொள்வது புத்திசாலித்தனமல்லவென்று அரசு உணர்ந்துள்ளது அவ்வாறு செய்வதானால் இந்தியாவை மேலும் பகைத்துக்கொள்வது ஒரு பக்கமிருக்க இந்த நாட்டுக்குப் பாக்கு நீரிணையூடாக வேறு எந்தப் பொருள்களுமே வந்து சேர்வதில் பிரச்னை எழ இடமேற்பட்டுவிடலாம்.

இந்துசமுத்திரத்தின் ஒரு கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ள இலங்கையில் வேறு பகை நாடுகளின் செல்வாக்கு அதிகரித்துவருவதை இந்தியா ஒருபோதும் விரும்பமாட்டாது என்பதால் மிகவும் தந்திரமாக நடந்துகொள்ள வேண்டிய நிலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே இந்திய பொருள்களை அவசரப்பட்டு அது தடைசெய்துவிடும் என்று கருத இடமில்லை.

மேலும், சுயாதீன மருத்துவர் சங்கம் விரும்புவதுபோல் இந்திய மருந்துப் பொருள்களின் இறக்குமதி நிறுத்தப்படுமானால் பெரும்பகுதியும் பாதிக்கப்படப் போகிறவர்கள் சிங்கள மக்களாகத்தான் இருக்கும்.

பெரும்பாலான மேற்கத்திய மருந்துகள், மருத்துவ சாமான்கள், இந்தியாவில் வெளிநாட்டு நிறுவனங்களாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகள் இலங்கைக்கு மாத்திரமல்ல, வேறும் பல கீழத்தேசங்களுக்கும் ஏற்றுமதியாகின்றன. அவசரமாகத் தேவைப்படும் மருந்துகள் இந்தியாவிலிருந்து தருவிப்பது மிகவும் எளிதாகவும், பண விரயம், நேர விரயம் குறைவதாகவும் உள்ளது. இன்னும் சொல்வதானால் இங்கு தேவைப்படும் ஆயுள்வேத மருந்துக் குளிகைகள் மட்டுமன்றி, இம்மருத்துவத்துக்குத் தேவையானவையும் மிகவும் அரிதாகக் கிடைப்பவையுமான கோரோசனை, குங்குமப்பூ போன்றவையும் இந்தியாவிலிருந்தே இங்கு தருவிக்கப்படுகின்றன.

மேலும், சுதேச வைத்தியத்துக்குத் தேவையான சகல மூலப்பொருள்களையும், நுட்பங்களையும் அங்கிருந்துதான் பெற்றுக்கொள்கின்றோம். எனவே மருந்து இறக்குமதியை நிறுத்துவதென்பது இலேசாக அரசியல் பிரசாரத்துக்காகப் பயன்படும் பொருளாகக் கருதிவிடலாகாது.

அதன் விளைவுகளையும், நாட்டுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் இவர்கள் எண்ணிப்பார்த்திடவேண்டும்.

# தினமும் அச்சத்தில் வாழும் மண்டைதீவு மக்கள்

(நமது நிருபர் சி. ஆ. ஏகானந்தசிவம்)

1986 ஆண்டு வைகாசி மாதம் முதல் மண்டைதீவுக் கிராமம் அமைதியின்றி. போக்குவரத்து வசதியின்றி ஏனைய சகல வசதிகளையும் இழந்துள்ளது. கல்வி, பொருளாதாரம், தொழில், சுகாதாரம், மின்சாரம் அனைத்தும், பாதிக்கப்பட்ட நிலையில் இக்கிராம மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாகச் சொன்னால் மண்டைதீவு சந்தியில் இராணுவ மினிமுகாம் அமைக்கப்பட்டதிலிருந்து இக்கிராம மக்களுக்கு அந்த நிலை ஏற்பட்டது எனலாம்.

### வசதிகளற்று வாழும் நிலை

மண்டைதீவு கடலால் சூழப்பட்ட ஒரு சிறு கிராமம். இங்கு மினிமுகாம் அமைந்ததிலிருந்து யாழ். நகருடனான நேரடிப்போக்குவரத்து பாதிக்கப்பட்டதினாலேயே இக்கிராமம் சகல வசதிகளையும், முன்னேற்றங்களையும் தொடர்புகளையும் அபிவிருத்தியையும் இழந்துள்ளது.

இதனால் கல்வி, தொழில் தொடர்புகளை இக்கிராமத்துக்கு வெளியில் பெற்றுவந்த மக்கள் சிலர் இங்கிருந்துவெளியேறி வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்.

மண்டைதீவுக் கிராமத்தின் குடிசனப்பகுதியிலிருந்துசுமார் இரண்டு மைல் தூரத்தில் பண்ணைவீதியில் இராணுவ மினிமுகாம் அமைந்துள்ளது. இதில் உள்ள இராணுவம் எந்த நேரமும் கிராமத்தினுள் நுழையலாம் என்றும் கிராமப் பகுதியினுள் எந்நேரமும் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற பயப்பீதியும் மக்களுக்கு தொடர்ந்தும் இருந்து கொண்டேயிருக்கிறது.

இதேவேளை இந்த மினிமுகாமினூடாக கோட்டைக்கு பொருள்கள் கொண்டு செல்வதற்கு வசதியான ஒரு கடல் மார்க்கப் பாதையையும் இராணுவத்தினர் கண்டுபிடித்து கடல் மார்க்கமாக சிறிய படகுகள் மூலம் முகாமிற்கு பொருள்கள், ஆயுதங்கள் சிப்பாய்களை ஏற்றி இறக்கும் வேலைகள் அடிக்கடி நடக்கின்றன.

### இராணுவம் சூழ்ந்தால் மக்கள் பீதி

இப்படி இவை இறக்கப்படும் போது இராணுவத்தினர் இம்முகாமைச் சூழ்ந்துள்ள கரையோரப் பகுதிகளிலும் குடிமனைகளை அண்டிய பகுதிகளிலும் காவல்செய்வது வழக்கம். இந்த நேரத்தில் ஹெலிகொப்டரும் தாழப்பறந்து வட்டமிட்டு காவல் புரியும். இப்படியான நேரங்களில் மக்கள்பீதிகொண்டு அயல் கிராமங்களுக்கு ஓடியும், இக்கிராமத்துக்குள்ளே அங்கு மிங்கும் ஓடியும் பீதி கொள்வது வழக்கம்.

இவையெல்லாம் பத்திரிகைகளில் பலதரப்பட்ட செய்திகளாக வருவதும் உண்டு. இப்படியான நேரங்களில் இக்கிராமத்தின் கடற்கரைகளில் பீரங்கிப் படகுகள் ரோந்து செல்வதாலும் கரையோரப் பகுதிமக்களும் பதற்றத்திற்குள்ளாவர்.

இதுவரை பீரங்கிப்படகுகள்இக்கிராமத்மதினுள்குண்டு வீசியது கிடையாது. கடல் பகுதிகளிலேயே சத்தங்கள் கேட்பது வழக்கம். அண்மையில் இப்பகுதியில் ஹெலிரோந்து சுற்றுகையில் வான் ஒன்றைக்கண்டு அந்த வானிலிருந்து இறங்கிச் சென்றவர்கள் மீது ஹெலி சுட்டதில் பெண்மணிஒருவர்பலியானார்.

இக்காலப்பகுதியில் இக்கிராமத்தைச் சேர்ந்த சிலர் வேறு இடங்களில் ஹெலிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளனர். இவ்வித உயிர்ப்பலிகளும், குண்டுச்சத்தங்களும் ஹெலிச்சுற்றுலாக்களும் ஏற்படுத்தும் பயப்பீதியால் மினிமுகாமை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களும், வயல் வெளிப்பகுதிகளில் உள்ள மக்களும் தமது இரவு நேர வாழ்க்கையை வேறு இடங்களுக்கு மாற்றியுள்ளனர். பலர் அயல் கிராமங்களான அல்லைப்பிட்டி மண்கும்பான், வேலணை ஆகியபகுதிகளுக்கும் தமது வசிப்பிடத்தை மாற்றியுள்ளனர்.

### கடலும் கப்பலும்

மண்டைதீவு, பாலதீவு, புங்குடுதீவு கடற்பகுதிகளைச் சேர்ந்த ஆழமான கடல்பகுதிகளிலேயே கடற்படையின் பெரிய கப்பல்கள் நங்கூரமிடுவது வழக்கம் இக்கப்பல்கள் மண்டைதீவு யாழ்ப்பாணக் குடாக் கடலுக்குள் வரமுடியாதவைகள் இவற்றிலிருந்து பெரிய வாகனங்களோ, பாரமான பொருட்களோ கரையிறக்க முடியாது. இப்பகுதியில் இதற்குஏற்ற துறைமுகமும் கிடையாது. ஊர்காவற்றுறை கடற்படைத்துறையில் மட்டுமே இவற்றைஇறக்கும் வசதியுண்டு. அத்துறையில் கூட இப்பெரிய கப்பல்களைஅணைக்க முடியாது. கடல் ஆழமும் போதாது. பெரிய பீரங்கிப் படகுகள் மட்டுமே அங்கும் அணைக்கலாம்.

மண்டைதீவு யாழ்ப்பாணக் குடாக்கடலில் சில ஆழமான பகுதியில்பெரிய பீரங்கிப்படகுகள்மட்டும்வருகின்றன. இவற்றில் கொண்டுவரப்படும் பொருட்கள், படையினர், ஆயுதப் பெட்டிகள் என்பன சிறிய படகுகள் மூலமே மினிமுகாமுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

### கடல் ரோந்தால் ஸ்தம்பிக்கும் படகுகள்

இப்படியான நேரத்தில் தான் மண்டைதீவு யாழ்ப்பாணக் கடல் பிராந்தியத்தில் சகலபடகுச் சேவைகளும் ஸ்தம்பிக்கின்றன. பொருட்களை இறக்கும் இப்பீரங்கிப் படகுகளுக்கு சிலநாட்களுக்கு முன்கடல் கண்ணி வெடிவைக்கப்பட்டது தெரிந்ததே. இதன்பின் இரண்டு முறைகள் இப்படகுகளின்மூலம் பொருட்கள் இறக்கப்பட்டன. ஆனால் வாகனம்போன்ற பொருட்கள் இங்கு இறக்கப்படுவதுமில்லை. இக்கடலால் இறக்கவும் முடியாது.

யாழ் கோட்டையிலிருந்து வெளியேறமுடியாத இராணுவம் மண்டைதீவு மினி முகாமின் உதவியுடனும், பீரங்கிப் படகுகளின் உதவியுடனும் சிறியபடகுகள் மூலம் இரவிரவாக யாழ் கரையோரப்பகுதிகளில்கரை இறங்கலாம் என்ற அச்சம் மண்டைதீவுமக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

### அவசரத்திற்கு வெளியேற முடியாது

மண்டைதீவுக் கிராமத்தினுள் இராணுவமோ, கடற்படையோ உட்புகுந்தால் உடனடியாக மக்கள் வெளியேறிச் செல்லமுடியாது இதனாலேயே மக்கள் பீதிகொள்வதும் அயல் கிராமங்களுக்கி அடிக்கடி இடமாறுவதும் வழக்கம்.

### கடலில் மிதக்கும் சடலங்கள்

முந்தியகாலங்களில் சடலங்கள் மண்டைதீவிலும்

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### எங்கள் அநுபவம்

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஒரு ஆத்மீக ஸ்தாபனம். இது 1969ம் ஆண்டிலிருந்து செயல்படுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயரைக்கொண்டு பல சேவைகளை பின்தங்கிய மக்களுக்கு செய்வதில் எக்காலத்திலும் பின் நின்றதில்லை. தற்சமயம் கூட நாங்கள் அரசியல் கலப்பற்ற முறையில் செயல்படுவதைப் பார்த்து ஒருவர் சங்கடப்பட்டு ஏதோ ஒரு பீதியைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார். எப்பொழுதும் மக்கள் சாந்தியுடன் வாழவழி செய்வதே எமது நோக்கம்.

ஒருசிலர் வதந்திகளைக் கிளப்பி இதனால் பலர் இவ்விடத்தை விட்டு செல்வதைப் பார்க்கும் பொழுது மிகவும் வேதனையாக இருக்கிறது. எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது சேவை இறைவன் பெயரால் நடைபெறும். இது உறுதி.

சுவாமி சித்ரூபானந்தா
பருத்தித்துறை

### அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில்

ஞான வைரவர் உலகில் சகல இன்னல்களையும் நீக்கி பெருவாழ்வு அருளுபவர். வைரவருக்கென்றே பெரிய கோயில் அமைத்து, திருவிழா நடாத்துவது தமிழ்நாட்டிலே சில இடங்களிற்தான் காணப்படுகிறது அவர் உறையும் ஆலயங்களில் தொன்மையும் சிறப்பும் கொண்டது அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயமாகும்.

இக் கோயில் அமைந்துள்ள இடத்தில் எப்பொழுதும் அமைதியாயிருக்கும். குளிர் காற்றும் வீசிக்கொண்டேயிருக்கும். ஆதலால் அவ்வூர் மக்கள் மன நிம்மதி வேண்டி அங்கு செல்வர். வைரவரை வணங்குவர். கோயிலுக்கு முன் வெட்டிக் கட்டப்பட்டிருக்கும் கிணற்று நீர்தான் அச் சூழலில் சிறந்த நீராகும். நாள் முழுவதும் மக்கள் அங்கு சென்று நீர் அள்ளிக் கொண்டு செல்வர்.

க யோகராசா

முன்பு தனியொருவரின் ஆளுகையில் இருந்த இவ்வாலயத்தை இவ்வூரார் பொறுப்பேற்று ஒரு பரிபாலன சபையினை அமைத்து கோயிலைச் சிறப்பாக பரிபாலிக்கின்றனர். இவ்வாலயத்கில் மூன்று கால நித்திய பூஜைகளும் நவராத்திரி திருவெம்பாவை முதலிய நைமித்திய பூஜைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பத்து நாட்களுக்கு திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

வைரவரின் திருவருளினாலும் அவ்வூர் மக்களின் ஊக்கத்தினாலும் ஞான வைரவப் பெருமானுக்கும் விநாயகப் பெருமானுக்கும், புதிதாக அமைக்கப்பட்ட வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானுக்கும் யூலை 8ம் திகதி புதன் கிழமை புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

# 250 குடும்பங்கள் ஆலயங்களில் தஞ்சம்

நெல்லியடி, புதன்

வல்வெட்டித்துறை பொலிகண்டி, தொண்டமானாறு, கெருடாவில், மண்டான் ஆகிய இடங்களிலிலிருந்து இடம் பெயர்ந்த250 குடும்பங்கள்தற்போதுவதிரி அந்தோனியார் ஆலயத்திலும் வதிரி திரு இருதயக்கல்லூரியிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்

இவர்களின் புனர்வாழ்வுக்கான ஏற்பாடுகளை கரவெட்டி பங்குத்தந்தை வணபிதா ஆர். எச். சகாயநாயகம் தலைமையிலான குழுவினர் அரசு நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு மேற்கொண்டுள்ளனர்.

## செஞ்சிலுவை சங்க தலைவர் யாழ் வருவார்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்கு ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க தலைவர் பந்துலு அபயசேகரா யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

இந்திய, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர்களுடன் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற மேற்படி சங்க உறுப்பினர் திரு. கிச்சான் சுகயீனம் காரணமாக கொழும்பு சென்றுள்ளதால் அவரின் இடத்திற்கு திரு பந்துலு யாழ்ப்பாணம் வரவுள்ளார். [ ]



'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் அறுபதாவது பிறந்தநாள் விழா யாழ் இந்துவிடுதியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்டபடம். படம்: செந்தில்

## அகதிகள்முகாம் பொறுப்பாளர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், வியா

யாழ். குடாநாட்டில் இயங்கும் நிலையான அகதிகள் முகாங்களுக்கு பொறுப்பாக உள்ளவர்கள் சுண்டிக்குளியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்க செயலாளருடன் நேரடியாகத் தோடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## மின்சார பாவனையாளருக்கு கடிதங்கள்

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவுப் பகுதியிலுள்ள மின் பாவனையாளர்கள் பலர் சடந்த பல மாதங்களுக்கு மேலாக மின் கட்டணங்களை செலுத்தத் வறியதனல் அவர்களுக்கு மின்சார சபையினர் நினைவூட்டல் கடிதங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்துள்ளனர்.

இது வரையில் புங்குடுதீவுப் பகுதிகளுக்கு சுமார் முன்னூறுக்கு மேற்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## கைப்பணி வேலைகள்

(வேலணை)

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் யுவதிகள் நெசவு, தையல் மற்றும் கைப்பணி வேலைகளை பழக விரும்பினுல் உடனடியாக வேலணை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி தி. பத்மாவதியுடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

## தினமும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சில சடலங்கள் வந்தடைந்தன. அண்மைக் காலங்களில் மண்டைதீவுக் கடற்பகுதியில் சடலம் எதுவும் கரை ஒதுங்கவில்லை. மண்டைதீவுக்கு அப்பால் உள்ளஅல்லைப்பிட்டிக் சடற்கரையிலேயே அண்மையில் பிணைக்கப்பட்ட மூன்றுசடலங்கள் கரை ஒதுங்கின.

### எல்லோரும் அகதிகள்

பயத்தோடும் பீதியோடும் அங்குமிங்குமாகத் திரியும் மக்களுக்கு சில செய்திகள் மேலும் பீதியை ஏற்படுத்துவதாக அமைகின்றது. ஆயினும் எந்தவிதபயமுமின்றி நடப்பது நடக்கட்டும் என்று இறை நம்பிக்கையோடு உறுதியுடன் தத்தமது இடங்களிலேயே வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களும் இக்கிராமத்திலிருந்து கொண்டே இருக்கின்றனர். ஆனல் போக்குவரத்து, கல்வி தொழில் என்பன சீரில்லாத நிலையில் மக்கள் கஷ்டத்துடனும் கவலையுடனுமே தினமும் வாழ்கின்றனர். சுருங்கக் கூறின் இங்குள்ள எல்லோரும் அகதிகளே.

## சகல பரீட்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் திட்டம் தீட்டியுள்ளது.''

யாழ். குடாநாட்டு மாணவர்களினுல் நேற்று நடாத்தப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆசிரியர்கள் சார்பில் உரையாற்றிய திரு எஸ் திருநாவுக்கரசு இவ்வாறு கூறினுர்.

யாழ் கல்வித் திணைக்கள முன்றலில் இக்கூட்டம நடைபெற்றது.

மேலும் அவர் தமதுரையில் ''அப்பாவித் தமிழ் மக்கள் பரந்து வாழும் இடங்களைத் தேடி அவர்களைச் சுட்டுக் கொல்வதும், விமானக்குண்டு, 'ஷெல்' தாக்குதல்களாலும் கொன்றொழிப்பதும் தான் ஜனதிபதி ஜயவர்த்தனவின் தார்மீகம் என்ற அவர் ''தமிழீழ மாணவர்களினுல் இன்று முன்வைக்கப்பட்டுள்ள ஆறு அம்சக் கோரிக்கைகளுக்குமான போராட்டம் மேலும் வலுவடைய வேண்டும் என்றூர்.

''வடமராட்சிப்பகுதி மாணவர்களின் சார்பில் செல்வன் குலராசா பேசுகையில் கூறியதாவது:

வடமராட்சிப்பகுதி மாணவர்களின் கல்லூரியில்தான் இராணுவம் முதன் முதல் கைவைத்தது. ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மகா வித்தியாலயம், போன்ற பல பாடசாலைகளில் இராணுவம் முகாமிட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியிலிடம் பெற்ற இராணுவநடவடிக்கைகளின்போது ஆயிரக்கணக்கான மாணவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பூஸா முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் நாம் பரீட்சை எழுதவேண்டுமா? உங்கள் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைஇடம்பெற்ருல்பரீட்சை எழுதக்கூடிய மனநிலை உங்களுக்கு வருமா? என்று கேள்வி எழுப்பினுர்.

மல்லாகம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி உதயமாலா பேசுகையில், கல்வி அமைச்சினுல் நடாத்தப்படவிருக்கும் அனைத்துப் பரீட்சைகளையும் நாம்பகிஷ்கரிக்கவேண்டும் என்றூர்.

கூட்டத்தில் ஊர்வலத்தின் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள் பிரதிநிதிகள் உரையாற்றினர். கூட்ட முடிவில் பாடசாலைகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமியிடம் பாடசாலை மாணவ பிரதிநிதிகளினுல் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன [வா]

## வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆயுதப்படை முகாம்களில் தடை முகாம்கள், ஊர்காவல் படை முகாம்கள், எல்லைப் படை முகாம்கள் என்பனஅடங்கும். திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் அதிக எண்ணிக்கையிலான முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியாக முகாம்களின் எண்ணிக்கை வருமாறு:

திருகோணமலை 61, மட்டக்களப்பு 31, அம்பாறை 30, வவனியா 25, யாழ்ப்பாணம் 19, மன்னர் 16, முளலைத்தீவு 10, கிளிநொச்சி 09. (ஒ)

## இந்திய

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளது.

இந்தியக் கப்பல்களில் உணவு வகைகள் தொடர்ந்து அனுப்பப்படுவதும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் இங்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும் உலக நாடுகளில் இலங்கையைப்பற்றி தவருன பிரசாரம் செய்வதற்கு ஈழம் வாதிகளுக்கு வாய்ப்பாகப் போய்விடும் என வழக்கறிஞர் காமினி ஈரியகொல்ல கூறியதாக அச்செய்தி கூறுகின்றது.

குடாநாட்டுக்கு நிவாரணப் பொருள் அனுப்பியதன் மூலம் இந்தியா ராஜதந்திர நடவடிக்கையொன்றையே மேற்கொண்டுள்ளது. சிங்கள மக்களுக்கும் இலங்கைக்கும் மாருக இந்திய அதிகாரிகளும் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் நடந்து கொள்ள இதுஉதவியுள்ளது.

இந்திய உணவுக் கப்பல்கள் இங்கு வருவதற்கும், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் இங்கு வருவதற்கு அனுமதி அளித்ததின்மூலம் அரசு தவறு இழைத்துள்ளது என்று திரு. ஈரியகொல்ல கூறியதாக அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பார்வையிடவந்த திரு. குப்தா பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் மேலும் கூறியதாவது;

இந்திய இலங்கை அரசாங்கங்கள் இணைந்து இங்குள்ள இனப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன அப்பிரச்னையை உடனடியாகத் தீர்ப்பதில் சிலசிக்கல்கள் இருப்பதால் தீர்வை உடனடியாக எதிர்பார்க்க முடியாது.

இந்திய நிவாரணப் பொருள்களுடன் தற்போது காங்கேசன் துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'பொறுக்கா' கடைசிக் கப்பலா? என்று கேட்டபோது திரு குப்தா பதிலளிக்கையில் கூறியதாவது:

பொறுக்கா கடைசிக் கப்பல் அல்ல.யாழ்ப்பாண மக்களுக்கு இன்னும் அதிக உணவுப் பொருள் தேவை. எனவே தொடர்ந்து உணவுக் கப்பலை அனுப்புமாறு நாங்கள் இந்தியாவுக்கு அறிவித்துள்ளோம் எனவே உணவுக் கப்பல்கள் தொடர்ந்து வரும். இங்குள்ள உணவுத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தேவைக்கேற்ப உணவுப் பொருள்கள் வந்தே தீரும்

செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பொது அமைப்புகள் உணவுப்பொருள்தேவையில்லை என்று அறிவித்தால் மாத்திரமே உணவுக் கப்பல்கள் நிறுத்தப்படும்.

பொறுககா – 2 ஏற்றிவந்த

## இந்திய நிவாரணப் பொருள்கள் நேற்றும் இறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், வியா.

இந்திய நிவாரணப்பொருள்களுடன் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து மூன்று மைல்களுக்கப்பால் நங்கூரமிட்டுள்ள ''பொறுக்கா-2'' என்னும் கப்பலிலிருந்து நேற்றும் உணவுப்பொருள்கள் இறக்கும் பணிகள்ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

பெருமளவு இராணுவ தளபாடங்களுடன் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு வந்திருக்கும் ''பெந்தோட்ட'', 'பாணந்துறை'' என்னும் இரு கப்பல்களிலிருந்து இராணுவத் தள்பாடங்கள் இறக்கும் வேலைகள் முடிவடையாததினுலேயே இந்திய உணவுக் கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்குவதில் தாமதமேற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இது இவ்வாறிருக்க இந்திய உணவுக் கப்பலிலிருந்து உணவுப் பொருள்களைத் துரிதமாக இறக்குவதற்குரிய நடவடிக்கைகளை யாழ் உணவுத் திணைக்கள உயரதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். [வா]

கட்டுநாயக்கா

## விமான தளம்மீது தாக்குதல்: 5 விமானபடையினரும் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம்மீது அண்மையில் தாக்குதலை மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 35 பேரை குற்றப்புலனய்வுப் பிரிவினர் இதுவரை கைது செய்துள்ளனர்.

இந்த 35பேரில் ஐந்துபேர் விமானப்படையைச் சேர்ந்தவர்களாவர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இந்த 35பேரில் இருபதுவயதுடைய இரு யுவதிகளும் அடங்குவர்.

மேலும் இந்தக்குழுவினரில் ரெயில் எஞ்சின்சாரதி ஒருவர், அரசாங்க தனியார் துறையைச்சேர்ந்த உத்தியோகத்தர்கள், வேலையற்ற இளைஞர்களும் உள்ளனர் என்று பொலிஸார் கூறினுர்கள்.

தாக்குதல் நடத்தப்பட்டதின் நோக்கத்த ஆராய்வதில் தற்போது குற்றப் புலனய்வுப் பிரிவினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (எ)

## படையினரால்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யினர் நேற்று யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு கே. கந்தசாமியிடம் கையளித்தனர்

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாடசாலைகளை இராணுவ முகாமாக மாற்றுமல், பாடசாலைகளிலுள்ள இராணுவத்தினரை உடனடியாக அகற்ற வேண்டும்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தமிழீழ மாணவர்களையும், ஆசிரியர்களையு விடுதலைசெய்யவேண்டும்.

பாடசாலை அதிபர்களின் அனுமதியின்றி மாணவர்களை எக்காரணம்கொண்டும் கைது செய்யக்கூடாது.

இனிமேல் பாடசாலைகளை இராணுவ முகாம்களாக மாற்றக்கூடாது.

பாடசாலை நேரங்களில் இராணுவத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படக்கூடாது. [வா]

## ராஜீவ் மகிழ்ச்சி

இந்திய உணவுப் பொருள் விநியோகத்தினுல்யாழ் மக்கள் அடைந்த மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் அறிந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், இந்திய மக்களும் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர்

யாழ்ப்பாண மக்கள் தமக்குள் ஏற்பட்டிருக்கும் பய உணர்வை விட்டு இனிமேல் நல்லது நடக்கும் என்று எதிர் பார்க்கலாம். [ஒ]

## செஞ்சிலுவை சங்க புதிய அலுவலகம்

யாழ்ப்பாணம், வியா.

செஞ்சிலுவைச் சங்க புதிய அலுவலகம் ஒன்று நேற்று மாலை யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஆர். டபிள்யு. சோமசிறியால் திறந்து வைக்கப்பட்டது.

## ''ஈழத்தைப் பிரிக்க ராஜீவ் தயங்குவதேன்'' — அன்பழகன்

(சென்னை)

''உணவுப்பொருள்களை அனுப்புவதால் மட்டும் ஈழப் பிரச்னையைத் தீர்த்துவிடப் போவதில்லை ராணுவ நடவடிக்கைகளினுல் நாளும் தமிழர் செத்துமடியும்போது உணவை உட்கொள்ள அங்கு யார் உள்ளார்கள்.''

கோவை சரவணம்பட்டியில் தி மு. க. பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது கழக பொதுச்செயலாளர் அன்பழகன் இவ்வாறு கேள்வி எழுப்பினுர்.

தொடர்ந்து அவர் பேசுகையில், நேருவே இந்தியாவைப் பிரிக்க கையெழுத்திட்டுள்ளார். ஆனுல் அவருடைய பேரன் காந்தி தமிழ் ஈழத்தைப் பிரிக்க தயங்குவது ஏன் என்று தெரியவில்லை. ஹிட்லர் காலத்தில் கூட இப்படி ஒரு நிலை ஏற்பட்டதில்லை ஆனுல் இலங்கைத் தமிழர்களின் நிலை எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று தெரியாது. அது குறித்து மத்திய அரசுக்கோ, அ. இ. அ தி மு கவுக்கோ கவலை இல்லை என்றூர்.

## மாதகல் முதல் பலாலி வரை-------
# 3000 கடற்றொழிலாளர் குடும்பங்கள் பாதிப்பு

பலாலி, புதன்.

மாதகல் தொடக்கம் பலாலி வரையுள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்கள் கடற்படையினரின் ரோந்தினாலும் இராணுவ நடவடிக்கையாலும் பெரும் பாதிப்படைந்துள்ளன.

கஷ்டத்தின் மத்தியிலும் தமது தொழிலைச் செய்து வந்த இப்பகுதி கடற்றொழிலாளர்கள், கடற்படையின் ரோந்து நடவடிக்கை அதிகரிப்பினாலும் கடலில் கடற்றொழிலாளரை சித்திரவதை செய்துவருவதாலும் கடலுக்கு சென்று தமது தொழிலை செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இக்கரையோர பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் தமது சொந்த வீட்டில் கூடவாழ முடியாத நிலை ஏற்பட்டது.

இப்பகுதியில் ஒருசில மக்கள் தமது வீடுகளிலிருந்து மீன்பிடித்தொழிலை செய்து வந்தபோதிலும் இராணுவ நடவடிக்கை மிகமோசமடைந்துள்ளதால் தமது தொழிலை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

## 1535 அகதிகள் குடும்பங்களுக்கு நிவாரணம்

பண்டத்தரிப்பு,புதன்

தென்னிந்தியதிருச்சபையின் யாழ். அத்தியட்ச ஆதீனம் இதுவரை அண்மைக்காலஇராணுவத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 1535 அகதிகள் குடும்பங்களுக்கு நிவாரணமாக உணவுப் பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

கொழும்புத்துறையில் 215 அகதிகள்குடும்பங்களுக்கும்அரியாலையில் 22குடும்பங்களுக்குப் பாண்டியன்தாழ்வில் 142குடும்பங்களுக்கும் மல்லாகத்திலுள்ள குளமங்காலில் 70 குடும்பங்களுக்குப் மருதனமடம் ஆச்சிரமத்தில் 76 குடும்பங்களுக்கும் உடுப்பிட்டியில் 460 குடும்பங்களுக்கும் பண்டத்தரிப்பில 550 குடும்பங்களுக்கும் இந்த உணவுப்பொருட்கள்அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

## நிவாரண படிவங்கள்

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் பாதிக்சப்பட்ட மக்களுக்கான நிவாரணப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் மண்டைதீவுக் கிராம சேவை அலுவலர் இப்படிவங்களைவிநியோகித்து வருகின்றார்

சென்றமாதம் இப்பகுதியில் இடம்பெயர்ந்து அகதிகளாகிக் கஷ்டமுற்ற மக்களுக்கு அகதி நிவாரண உதவிப்படிவங்கள் வழங்கப்பட்டன. இக்கிராமத்தில் பாதிப்புக்குள்ளான வறிய மக்களுக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய பங்குத்தந்தை அருட்திரு அ சகாயதாசன் தலா 100 ரூபா வீதம் உதவி வழங்கியருந்தார். ஒரு நூறு பேருக்கு இவ்வுதவிவழங்கப்பட்டது.

## 475 அகதிகள் குடும்பங்களுக்கு----
# இந்திய உணவுப்பொருள் விநியோகிக்க ஏற்பாடு

பண்டத்கரிப்பு,புதன்

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதிகள் முகாம்களுக்கும்- வலி-தென்-மேற்கு உ வி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதிகள் முகாமகளுக்கும் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள்விரைவில் நேரடியாகச் சென்று பார்வையிட்டு இந்தியா அன்பளிப்புச் செய்துள்ள உணவுப் பொருள்களை வழங்கவுள்ளனர்.

வலி. மேற்கில் சங்கானை கலாசார மண்டபம், கிராம நீதிமன்றம், புனித சலோசியர் தேவாலயம், சிவப்பிரகாச வித்தியாலயம், நிற்சாமம் ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம், சிலம்புப் புளியடி வைரவர் கோவிலடி, நிகிரை வைரவர் கோவில் ஆகிய இடங்களில் 475 குடும்பங்களைச் சேர்ந்த 2.05 பேர் அகதிகளாக தங்கியிருப்பதாக சணக்கிடப்பட்டுள்ளது.

வலி. தென்-மேற்கு பிரிவில் நவாலியிலும், சில்லாலை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலும் சுமார் 350 குடும்பங்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளன.

இக்குடும்பங்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கான ஒழுங்குகளை அவ்வப்பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் தத்தமது பகுதி பிரஜைகள் குழுக்களின் அனுசரணையுடன் துரிதகதியில் மேற்கொண்டுவருகின்றனர்.

# "எமது உயிருக்குப் உத்தரவாதமளியுங்கள்"

நெல்லியடி - செவ்வாய்

"உணவு தந்தீர்கள் உயிருக்கும் உத்தரவாதம் அளியுங்கள்" என்று நெல்லியடிப் பிரதேசத்தைச் சோந்த பல அகதிகள் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் முன் கதறியழுத பரிதாபகரமான காட்சி உள்ளத்தைத் தொடுவதாக இருந்தது.

செஞ்சிலுவைச் சங்கம் திங்கள் வடமராட்சிப்பகுதியில் உள்ள பல பகுதிகளுக்கும் சென்று சேதமடைந்த கட்டடங்களைப் பார்வையிட்டதுடன் பல அகதிமுகாம்களுக்கும் சென்று அகதிகளின் நிலையை நேரடியாகக் கண்டறிந்தது.

செஞ்சிலுவைச் சங்க உறுப்பினருடன் பருத்தித்துறை, கரவெட்டி உப அரசாங்க அதிபர்களும் சிலகத்தோலிக்க குருமாரும் வர்த்தகர் சங்க பிரஜைகள் குழுப்பிரதிகளும் சென்றனர்.

வதிரி புனித அந்தோனியார் ஆலய முகாம் மாலிச்சந்தி, விக்கினேஸ்வராக் கல்லூரி முகாம் ஆகியவற்றுக்குச் சென்ற பிரதிநிதிகள், அகதிகளுக்கான உணவு வழங்கியதுடன் அறுதலும் கூறினர்.

## ஓய்வு பெறும் பதிவாளருக்கு சட்டத்தரணிகள் பிரியாவிடை

யாழ்ப்பாணம், புதன்

"தன்னலம் கருதாது மக்கள் சேவையே மகேசன் சேவையெனச் சேவைபுரிந்த பதிவாளா அன்னலிங்கம் தமது வயதின் மூப்புக் காரணமாக ஓய்வு பெற்றாலும் அவரது சேவை யாழ்ப்பாண மக்களுக்கு இன்னும் பலகாலம் வேண்டும்".

இவ்வாறு சட்டத்தரணி எஸ். சோமசுந்தரம், யாழ்ப்பாணம் பழையபூங்கா வீதி, ஜசனீஸ் ரெஸ்ரோரண்ட்விடுதியில் அன்னாரது சேவைநலம் பாராட்டு விழாவில் தெரிவித்தார்

இவ்விழாவை யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. விழாவிற்குச் சட்டத்தரணி கே. செல்வராஜா தலைமை வகித்துப் பேசுகையில்—

"அன்னலிங்கம் எதையும் நிதானமாக, ஆற அமர யோசித்துச் செயலாற்றும் பண்பாளர்" எனறார்.

வைபவத்தில் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் சட்டத்தரணிகள், நொத்தாரிசுமார்கள், கல்விமான்கள் உட்படப்பலர் கலந்துகொண்டனர்.

சட்டத்சரணி கே. நடராசா உரையாற்றுகையில், "அன்னலிங்கம் போன்றவர்கள் தமது நேர்மையான உழைப்பால் மக்களுக்குச் சேவைபுரிந்த அரச ஊழியர்கள் அவ்வாறே அன்னலிங்கமும் தன்னாலான தூய சேவையை எம்மக்களுக்கு ஆற்றியுள்ளார்." என்றார்.

வைபவத்தில் சட்டத்தரணிகள்: எம். விசுவநாதன், கே குணரட்னம், கே. கேசவன், எம். தவபாலன், நொத்தாரிஸ் கே. தர்மராஜா உட்படப்பலர் உரையாற்றினர். திரு. அன்னலிங்கத்தின் பணியைக் கௌரவிக்குமுகமாக சட்டத்தரணி நொத்தரிசுகள் சார்பில் திரு. ஆ மயில்வாகனம் பொற்கிழியொன்றை வழங்கினார். [கை]

## முதலாவது ஆண்டுவிழா

உடுவில், செவ்வாய்

இணுவில் பொது நூல் நிலையததுன முதலாவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 4ம் திகதி காலை இணுவில் பரராசசேகர பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் திரு. சி சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு. சபாஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார்.

## ஆலய விபரங்கள்

பண்டத்தரிப்பு, புதன்

கீரிமலை சிவநெறிக்கழகம் யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினால் சேதமாக்கப்பட்டிருக்கும் சைவ ஆலயங்கள் பற்றிய விபரங்களை திரட்டி வருடன்றது.

## கூட்டுறவுச் சங்கத்தில் திருட்டுமுயற்சி தோல்வி

நெல்லியடி, புதன்

கரவெட்டி மேற்கு கூட்டுறவுச் சங்கக்கடையை நள்ளிரவில் உடைத்து களவாடமேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

ஒருசிலர் ஆயுதங்களுடன் சென்று கடையின் பூட்டுகளை உடைத்தசத்தத்தினைக்கேட்ட அயலவர் குரலெழுப்பியதும் திருடர்கள் ஓட்டம் பிடித்தனர்.

இன்றைய பதற்றநிலையைப் பயன்படுத்தும் திருடர்கள் விடயத்தில் கவனமாக இருக்க வேண்டுமென அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

## பலியானோர், காணமல் போனவர்கள் பற்றிய விபரங்கள் சேகரிப்பதில் பிரஜைகள் குழுக்கள் ஒன்றியம்

(மாவிட்டபுரம்)

வலி-வடக்குப் பகுதியில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் பலியானோர், காணமல் போனவர்கள் பற்றிய விபரங்களை வலி-வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

மேற்படி பகுதியில் கடந்த மாதம் 7ம் திகதிக்குப் பின் இராணுவ நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை யடைந்து தற்போது பலபகுதிகளில்இராணுவம் நிலைகொண்டுள்ளதால் அப்பகுதியில் கொலையுண்டும் காணமல் போயும்உள்ள மக்களின் விபரங்களை சரியான முறையில் அறிந்து கொள்வது கஷ்டமாக இருப்பதாக மேற்படி ஒன்றிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

விபரங்கள் தெரிந்தவர்கள் தெல்லிப்பழையில் உள்ள ஒன்றிய அலுவலகத்துடன்தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தால் கழித்தெறியப்பட்ட அச்சுவேலி தபாலக கடிதங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்

(அச்சுவேலி நிருபர்)

அச்சுவேலி தபால் அலுவலகத்திற்குள் இராணுவத்தினால் கிழித்தெறியப்பட்ட சேதப்படுத்தப்பட்ட கடிதங்கள் உரிய விலாசத்திற்கு சேர்ப்பிக்கப்படவுள்ளது.

அச்சுவேலியை கடந்தமாதம் முற்றுகையிட்ட இராணுவம் அச்சுவேலிதபால் அலுவலகத்தை உடைத்துசேதப்படுத்தியதுடன் அங்கு விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருந்த இரண்டு தபால் பைகளையும் திறந்து அதிலிருந்த நூற்றுக்கணக்கான கடிதங்களைகிழித்து சேதப்படுத்தினர்.

கிழித்து சேதப்படுத்தப்பட்ட தபால்களில்மிக முக்கியமான ஆவணங்கள் உடமைகள்இருப்பதால் அவற்றைஅடையாளம் கண்டு உரியவிலாசத்தில் ஒப்படைப்பதற்கு அச்சுவேலி தபால் நிலையஅதிபர் ஏற்பாடு செய்துள்ளார்.

"இந்தவாரம் இந்தக்கடிதங்களைசம்பந்தப்பட்ட விலாசத்தாரிடம் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் பலகடிதங்கள் தொடர்புபடுத்த முடியாத அளவிற்கு சேதப்படுத்தப்பட்டு விலாசங்கள் மறைக்கப்பட்டிருப்பதாகவும்" அச்சுவேலிதபால் நிலைய அதிபர்தெரிவித்துள்ளார். [ச]

## நாற்பதாண்டு நற்பணி

உலகெலாம் சைவநீதி விளங்கவேண்டும் என்ற தனிப்பெரும் நோக்குடன் 1946ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தெல்லிப்பழை 'பாலர் ஞானோதைய சபை' இன்று தனது நற்பதாண்டு சேவையை பூர்த்திசெய்துள்ளது. சபையின் ஸ்தாபகர் சிவஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் சிவகடாக்ஷக் குருக்களின் சேவை அளப்பரியது.

வளர்பிறைபோல் வளர்ச்சி பெற்ற இச்சபை இசைக்கல்லூரி ஒன்றயும் ஆரம்பித்து இசைத்துறைக்கும் தனது சேவையை அர்ப்பணித்தது. 1972ல் வெள்ளிவிழாவை சிறப்பாக சபை கொண்டாடி 'வெள்ளிவிழா' மலரொன்றையும் வெளியிட்டது.

சமயகுப்பு மாணவர்களின் நலன்கருதி 62ம்,73 ஆண்டுகளில்கூட்டுப் பிரார்த்தனைபுத்தகங்களும், 85ல்'பெரிய புராணவசனச் சுருக்கம்' எனும் நூலையும், 86ல் பத்துக் கட்டுரைகள், திருத்தொண்டர் புராணம், வினவிடை நூலும் சபையின் வெளியீடாக வெளியிடப்பட்டன.

சகல சமயப் பணிகளையும் இலவசமாக நடாத்திவரும் 'பாலர் ஞானோதைய சபை' இன்று நாற்பதாண்டை பூர்த்திசெய்கின்றது. ஆயிரக்கணக்கான மாணவர்களின் சமய சமூக வாழ்க்கையை முன்னேற்றியசபையின்வளர்ச்சிக்கு பொதுமக்கள் அளித்த ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் மறக்கமுடியாது. மேலும் பல பணிகளைத்தொடரவும சபை தற்போது முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

நா.சிவபாலகணேசன்,
செயலாளர்.

## சமய விரிவுரைகள்

பண்டத்தரிப்பு,புதன்

லண்டனிலுள்ள சைவ ஆலயங்களில் சமய விரிவுரைகளை நிகழ்த்துவதற்காக பிரிட்டனுக்கு தற்போது விஜயம்செய்துள்ள 'சிவத் தமிழ்ச் செல்வி' தங்கம்மா அப்பாக்குட்டி அடுத்த வாரம் நாடு திருபவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## உணவுப் பொருள் அட்டைகள்

நெல்லியடி, புதன்

கரவெட்டி மேற்கில உள்ள மக்களுக்கான உணவுப் பொருள் அட்டைகள் துரிதமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது

கரவெட்டி மேற்கு கிராம சேவையாளர் திரு எஸ். ஞானசம்பந்தன் படையினரால் கைதுசெய்யப்பட்டதன் விளைவாகவே இவ்விநியோகம் காலதாமதமாகியதாகத் தெரிகிறது.

## படகோட்டி இருவர் கைது

(புங்குடுதீவு நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு புறப்பட்ட படகொன்று நேற்று முன்தினம் பகல் ஒன்பது மணியளவில் அனலைதீவு கடல் பகுதியில் வைத்து கடற்படையினரால் தடுதது நிறுத்தப்பட்டு நயினாதீவு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டது.

“தமிழீழப்போரில்

# மக்கள் அனைவரும் நேரடியாக இணைந்துகொள்ளவேண்டும்”

## —திலீபன்

யாழ்ப்பாணம், வியாழன்
“வாழ்வதற்காகப் போராட வேண்டிய இன்றையகாலகட்டத்தில் தொடர இருக்கும் இந்த உக்கிரமான போரில் நம்நிரந்தரவிடிவை உறுதிப் படுத்திக்கொள்ள மக்கள் அனைவரும் நேரடியாக இணைந்து கொள்ளவேண்டும்.” என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப்பொறுப்பாளர் திலீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாகஅவர்விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

“ஸ்ரீலங்கா அரசின் இன அடக்குமுறை நடவடிக்கைகளினுல் இன்றுவரை 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பலியாகி உள்ளனர். எமது மக்களைக்காப்பாற்றி அவர்களின் நிரந்தரம்பாதுகாப்பை சுதந்திரமாக, சுபீட்சமான வாழ்வை உறுதிப்படுத்துமுகமாக விடுதலைப்போரில் 585 வீரவேங்கைகள் வீரமரணமடைந்தனர். ஆயிரமாயிரம் வேங்கைகள் களத்தில் நேரடிப்போரில் குதித்துள்ளனர். உயிர் வாழ்வதற்காகப்போராட வேண்டிய காலகட்டத்தில் தொடரவிருக்கும் இந்த உக்கிரமான போரில் தம்நிரந்தர வடிவை உறுதிப்படுத்திக்கொள்ள மக்கள் அனைவரும் இப்போரில் இணைந்து கொள்ளுமாறு பகிரங்கமாக அறைகூவல் விடுக்கிறோம்.

கிராமங்கள்தோறும் சுய பாதுகாப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டுவருகின்றன எனவே ஆண், பெண் முதியோர் என்ற பேதமின்றி அனைவரும் ஒன்றுபட்டு எம்மை நிரந்தரமாகக்காப்பாற்றும் தமிழீழப்போரில் இணைந்து கொள்ளவேண்டும் இது பற்றிய மேலதிகவிபரங்களை பிரதேசப்பொறுப்பாளரிடம் தொடர்புகொண்டு பெற்றுச் செயல்படவேண்டும் என்றும் அந்த அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

திருமலையில்

# விடுதலை விதையை வளர்த்த தளபதி மேஜர் கஜேந்திரன்

யாழ்ப்பாணம்,வியா
“திருமலை மாவட்டத்தில் விடுதலை விதைகளை விதைத்து அதை வளர்த்து உரம்பெறச் செய்தவர்களில் மூதூர் பிராந்தியத் தளபதி மேஜர் கஜேந்திரனும் ஒருவர். முப்படைகளினுலும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களப் பிரதேசமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் திருமலை மாவட்டத்தில் அவர் ஆற்றிய பணி அளப்பரியது”

மூதூர் பிராந்திய தளபதி மேஜர் கஜேந்திரனின் வீரமரணம்குறித்து தமிழீழவிடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் கிளிநொச்சி. முல்லைத்தீவு, மன்னுர், திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவனியா இத்தனை மாவட்டங்களையும் இணைத்து உள்ளடக்கிய தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் போராட்டம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. திருமலை மாவட்டத்தில் அமைந்துள் மூதூரின் பிராந்திய தளபதி கணேஷின் வலதுகரமாகத் திகழ்ந்தவர் மேஜர் கஜேந்திரன். இவர் 1981ன் பிற்பகுதி முதல் இயக்கத்தில் பகுதிநேர உறுப்பினராக இருந்தார். விடுதலையைப்பற்றி ஒருசிலரே உணரத் தொடங்கிய அந்த நாட்களில் மேஜர் கஜேந்திரன் பிரசுரம் விநியோகித்து, ஆட்களை இயக்கத்துக்குச் சேர்த்து விடுதலைக்கான ஆரம்பநடவடிக்கையில் தீவிரமாக செயல்பட்டார். 1983ம் ஆண்டு ஜூலையில் பயிற்சிப்பாசறையில் சிறந்த வீரராக அனைவராலும் பாராட்டப்பட்டு திருமலை மண்ணுக்கு அனுப்பட்டார்.

மூதூர் கட்டைபறிச்சான் கண்ணிவெடித் தாக்குதல், குச்சவெளி பொலிஸ் நிலையத் தாக்குதல், பட்டித்திடல் கண்ணிவெடித்தாக்குதல், பன்மதவாச்சி இராணுவத்தாக்குதல் போன்றவற்றை வெற்றிகரமாகச் செய்தமை இவரது வீரச்சான்றுகளாகும்.

மூதூர் தளபதி கணேஷின் மறைவையடுத்து தலைவர் வே பிரபாகரனுல் மூதூர் பிராந்தியத் தலைவராக இவர் நியமிக்கப்பட்டார். இராணுவரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியாகவும் முழுமூச்சுடன் செயல்பட்டவர். இவர் ஜூன் மாதம் 28ம் திகதி நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்தார். (மா)

## இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—18 (02-7-1987)
கிழமை—வியாழன்
திதி—ஷஷ்டி
நட்த்திரம்—பூரம்

மேடம்:- யாத்திரைப் பிரியமுண்டு. பொதுசனத்தலைமையுண்டு குடும்பத்திலும் அமைதி நிலவும்.

இடபம்:- ஒளிபரப்பும் வாழ்க்கை உறவினர் மதித்யில் ஒற்றுமை மனைச்சிறப்புமுண்டாம்.

மிதுனம்:- பிறர் மூலம் நன்மைகிட்டும்,புதிய தொழில் வியப்பைத்தரும் உயர்கல்வி நாட்டமுண்டாம்.

கடம்:- வேதனையின் ரேகைகள் படரும், பெண்கள் அவதானமாக இருக்கவும். எவ்விடயத்திலும் முன்னெச்சரிக்கை நன்று

சிங்கம்:- பிரயாணத்தைப் பின் போடவும், கடமையில் நிதானம் செலுத்தவும் எதிலும் குறைகேட்க நேரிடலாம்.

கன்னி:- கனிவான நினைவு குடும்ப சுகம். குறிக்கோள் வெற்றி இவற்றுடன் தெய்வ வழிபாடும் உண்டு.

துலாம்:- அவப்பெயர் கேட்க நேரிடும், முன்னேற்றத்தடையுமுண்டாம், அரசியல் வாதிகளுக்கும் அடிசறுக்கலாம்.

விருச்சிகம்:- தனவரவுண்டு தன்தொழில் விருத்தியுண்டு உத்தியோகச் சிறப்புமுண்டாம்.

தனுசு:- பெரியோர் புகழ்ச்சியுண்டு. பொன்னுன வாழ்வுமுண்டு. வரவிலும் திருப்தியுண்டாம்.

மகரம்:- குடும்பப்பிணி தலைதூக்கும், ஏமாற்றம் தாக்கும், வருமான வீழ்ச்சியுண்டாம்.

கும்பம்:- சுபகருமம் ஏற்படும் புண்ணிய விருப்பும் மேலிடும், உத்தியோக உயர்வுமுண்டாம்.

மீனம்:- ஏக்கத்தின் சாயல் தலைதூக்கும், கடன் தொல்லை அதிகரிக்கும் கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும்.

திருமலை ரவீந்திரன்

வளலாய் மினி முகாம்

# விஸ்தரிப்புநடவடிக்கையினுல் வீடுகள், பயிர்கள் சேதம்

[அச்சுவேலி நிருபர்]
வளலாய் மினி இராணுவ முகாம் விஸ்தரிப்பு பாதுகாப்பு நடவடிக்கையின் நிமித்தம் வீடுகள் பயிர்செய்கை நிலங்கள் அழிக்கப்படுகின்றன.

கடந்தமாதம் அச்சுவேலிக்கு வந்து திரும்பிச்சென்ற இராணுவம் வளலாய்ப் பகுதியில் மினி முகாம்ஒன்றை அமைத்துள்ளது.

இந்த மினிமுகாமை போராளிகளின் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும்நோக்குடன் விஸ்தரிப்பு பாதுகாப்பு நடவடிக்கையில் இராணுவம் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளது இதன் நிமித்தம் பலவீடுகள் தரமான பயிர்ச்செய்கை நிலங்கள் என்பன அழிக்கப்பட்டு வருகின்றன.

புல்டோசர் போன்ற கனரக வாகனங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு பாதுகாப்பு அரண்கள் அகழிகள் அமைக்கப்படுகின்றன

வளலாய் இராணுவம் மினிமுகாம் அமைக்கப்பட்டதை அடுத்துஇடைக்காடு, வளலாய் ஆகியபகுதியிலுள்ள பொது மக்கள் தமது வீடுகளைவிட்டு அகதிகளாக வெளியேறியுள்ளனர்-

# மரத்தளபாட தொழிற்சாலை தீப்பற்றி எரிந்தது!

## பல லட்சம் ரூபா சேதம்

[அச்சுவேலி நிருபர்]
அச்சுவேலியில் இயங்கிவந்த மரத்தளபாடத் தொழிற்சாலை ஒன்று தீப்பற்றி எரிந்து முற்ருக சேதமடைந்ததில் பல லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

அச்சுவேலி - யாழ்ப்பாணம் வீதியிலுள்ள விசுவலிங்கம் கணேசு என்பவருக்கு சொந்தமான மரத்தளபாடத்தொழிற்சாலையே தீப்பற்றி எரிந்து முற்ருகச் சேதமடைந்தது.

தொழிற்சாலையில் பயன்படுத்தப்பட்டுவந்த பல நவீன யந்திரசாதனங்கள், பல ஆலயங்களிற்காக செய்யப்பட்டு வந்த வாகனங்கள் மற்றும் தளபாடங்கள், விலைஉயர்ந்த மரங்கள் என்பன முற்ருக எரிந்து சாம்பராகின. இதனுல் பல லட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ரதோற்சவம்

யாழ்ப்பாணம், வியா
வட்டுக்கோட்டை வீரபத்திரர் சிவன்கோயில் இரதோற்சவம் இன்று காலை நடைபெறும். நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## வை. எம். சி. ஏ. வெள்ளி விழா

பண்டத்தரிப்பு, நிருபர்
அகில இலங்கை வை. எம். சி. ஏயின் தேசிய சபையின் வெள்ளிவிழா நாளை 3ம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிககிழமையும் கொழும்பு வை. எம். சி ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ் மாவட்டத்திலுள்ள வை. எம். சி. ஏ நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ அட்டூழியங்கள் அகதிகள் பிரச்னை மக்களின் கஷ்டநிலை ஆகிய விடயங்கள் பற்றியும் தேசிய சபையின் கவனத்திற்கு யாழ் பிரதிநிதிகள் எடுத்துக் கூறவிருக்கிருர்கள் என்றும் அறியப்படுகினறது.

## கருத்தரங்கு

(வேலணை நிருபர்)
தீவுப்பகுதியில் பனை அபிவிருத்தி பனை வளர்ப்போர் சம்மேளம் அமைத்தல் தொடர்பான கருத்தரங்கு இன்று புங்குடுதீவில் நடைபெறவிருக்கின்றது.

இதற்கான ஏற்பாடுகளை அவ்வப்பகுதிக்குப் பொறுப்பான விசேட சேவை அலுவலர் செய்துள்ளார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாச்சர சண்முகதாஸ் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

## பயிற்சிகருத்தரங்கு

வேலணை, புதன்
யாழ் மாவட்டத்தில் விசேட சேவைஉத்தியோகத்தர்களாக கடமையாற்றி இம்மாதம் முதல் கிராமசேவை அலுவலராக நியமனம்செய்யப்பட்ட கிராமசேவை அலுவலர்களுக்கு யாழ் கச்சேரியில் எதிர்வரும் 14ம், 15ம், 16ம் திகதிகளில் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணம் செயலகத்தில் பயிற்சிக் கருத்தரங்கொன்று நடைபெறவிருக்கின்றது.

இப்பயிற்சிக் கருத்தரங்கை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் நடத்துகின்ருர்.

# பூஸாவில் இடநெருக்கடி கைதான இளைஞர்கள்

## கட்டுக்கொடவுக்கு இடமாற்றம்

(ஓட்டுசுட்டான் நிருபர்)
வடமராட்சியிலிருந்து கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் அங்கு இடநெருக்கடியால் காலி நகருக்கு அண்மையில் உள்ள கட்டுக்கொடை என்னும் இடத்திலுள்ள ஹார்பரி களஞ்சிய அறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இங்கு எந்த வித சுகாதார வசதியுமில்லையென தெரிவிக்கப்படுகிறது.

# நள்ளிரவில் வீடுடைத்து நகைகள் திருட்டு

பலாலி, புதன்.
வீட்டில் தனியாகப் படுத்திருந்த பெண்மணி ஒருவரிடம் நள்ளிரவு வேளையில் 60ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளைத் திருடிச் சென்ற சம்பவமொன்று ஏழாலை தெற்கில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:-

இப்பகுதியில் அடிக்கடி நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளால் பீதியுற்ற திருமதி வாசகர் என்னும் இப்பெண்மணி தனது நகைகளை ஒரு பைக்குள் போட்டு தான் படுக்கும் இடத்திற்கு அருகாமையில் மறைத்து வைத்துவிட்டுப் படுத்திருந்தார்.

அந்நேரம் இனந் தெரியாத கோஷ்டியொன்று வீட்டுக்குள் கதவை உடைத்துப் புகுந்து அப்பெண்ணிடம்இருந்த முடிச்சைப் பறித்தெடுத்ததுடன், வீட்டிலிருந்த ஏனைய பெட்டிகளையும் திறந்து தேடுதல்நடத்திச் சென்றுள்ளனர்.

இக்கொள்ளையர்களைப் பிடிப்பதற்கு இளைஞர் கோஷ்டியொன்று நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், புதன்
மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய அம்பாள் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு திரு இ வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்ற சமயம் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர்:- திரு. இ வேலும் மயிலும், உபதலைவர்:- திரு. செ. தனபாலசிங்கம், இணைச் செயலாளர்கள்:- திருவாளர்கள் வெ. தங்கவடிவேல், ச. சிவசுப்பிரமணியம், பொருளாளர்:- திரு. ச. பொன்ராசா. 13 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்
(1) ★ பாண்டியன் ★ ரேகா ★ செந்தில்
“ஆண்களை நம்பாதே”
(2) WAR FILM:
THUNDER SQUAD
குணம் வீடியோ சென்ரர்,
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665
(ஏ-122)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 2-7-87

வீடுகளைப் பார்வையிட

# அனுமதியுடன் சென்ற மக்கள் மீது படையினர் சரமாரியான சூடு!

[மாவிட்டபுரம் நிருபர்]

இராணுவத்தின் அனுமதியுடன் வீடுகளைப் பார்வையிட்டு அத்தியாவசிய பொருள்களை எடுத்துவரச்சென்ற பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சரமாரியான துப்பாக்கிப்பிரயோகத்தையடுத்து அவர்கள் ஓட்டமும் நடையுமாகத் திரும்பினர்.

கடந்த இரு தினங்களாக மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதி மக்கள் தத்தமது வீடுகளைச் சென்று பார்வையிட்டு அத்தியாவசியப் பொருள்களை எடுக்க இராணுவத்தினர் அனுமதியளித்திருந்தனர்.

மாவிட்டபுரம் சந்திக்கு சற்றுத் தொலைவில் பொதுமக்களது அடையாள அட்டைகள் பரிசீலனை செய்யப்பட்டு தொடர்ந்து செல்ல அனுமதி வழங்கப்பட்டது. வாகனங்களுடன் சென்று பொருள்களை எடுத்துவரவும் அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய ஏராளமான பொதுமக்கள் தமது வீடுகளைச் சென்று பார்வையிட்டு அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வந்தனர்.

ஆனால் நேற்று நண்பகல் மாவிட்டபுரம் பகுதியிலிருந்து படையினர் திடீரென சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ததையடுத்து பொதுமக்கள் ஓட்டமெடுத்து தெல்லிப்பழைக்கு வந்துசேர்ந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் வீடுகளை பார்க்கச் சென்றவர்கள் தமது பொருள்களைக் காணவில்லையென இராணுவ அதிகாரியிடம் புகார் செய்தனர். புகாரையடுத்து சிலரது பொருள்கள் இராணுவத்தால் வேறிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏனைய பொருள்கள் பற்றி விசாரணைசெய்து விரைவில் பெற்றுத்தருவதாக உறுதியும் அளிக்கப்பட்டது.

பலரது வீட்டுப்பொருள்கள் வேறு வேறு இடங்களில் கிடக்கக் காணப்பட்டன.

## சீமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், வியா

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை சம்பளம் வழங்குவதற்கு மேலிடத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. [ஒ]

★ ஒற்றுமையே இன்று பிரதானம்

# ஈழத்தின் முதலமைச்சராக பிரபா வந்தாலும் வரவேற்பேன்

— சென்னையில் 'அமிர்'

[கொழும்பு]

"எம்மத்தியில் ஒற்றுமையே இன்று பிரதானம் எமது ஒற்றுமையின் சக்தியால் திரு. பிரபாகரன் ஈழத்தின் முதலமைச்சராக வந்தாலும் அதனை நான் வரவேற்பேன்".

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அண்மையில் சென்னையில் கருத்துவெளியிட்டுள்ளார்.

திரு அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை அண்மையில் நான் சந்தித்தபோது கூட அவர், நீங்கள் முதலில் ஒன்றுபடுங்கள். அதன்பின் தீர்வுக்கான வழிவகைகளை நாங்கள் எடுக்கிறோம். உங்கள் மத்தியில் ஒற்றுமையில்லாத நிலையில் நாம் என்னசெய்வதென்பதையே தீர்மானிக்க முடியாமல் இருக்கிறோம் என்றார்.

"எனக்கு பதவியேற வேண்டுமென்ற ஆசை கிடையாது. 40 வருடங்களாக அரசியலில் ஈடுபட்டுவிட்டேன்.

"தேர்தலை தமிழினம் நினைத்துப்பார்க்கு மளவுக்கு இல்லை. தமிழினத்தின் அபிலாஷைகள் பூர்த்தியான பின்னரே தேர்தலைப்பற்றி யாரும் சிந்திகக வேண்டும்.

"மேலும் வடக்கு-கிழக்குப் பகுதியில் அரசு தமிழர்களுக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது இந்நிலையில் பேச்சுவார்த்தைகளுக்கு இடமேயில்லை". (எ)

## மரண அறிவித்தல்

### சகோதரி எலிசபேத் பேக்கர்

முரசுமோட்டை பரந்தன் பகுதியில் சயிக்கிள் அம்மா என்று அழைக்கப்பட்ட சகோதரி எலிசபேத் பேக்கர் அம்மா கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார். அன்னாரின் இறுதி மரண ஆராதனை வெள்ளி 3-7-87 காலை 10-00 மணிக்கு நவஜீவனத்தில் நடைபெறும். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[சி 9563] நவஜீவனம் பரந்தன்.

### சி ரு. சீனிவாசகம் தியாகராஜா (கொட்டடி)
(இளைப்பாறிய இலிகிதர் கச்சேரி யாழ்ப்பாணம்)

கொட்டடியைச் சேர்ந்த சீனிவாசகம் தியாகராசா சிவபதம் அடைந்துவிட்டார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சீனிவாசகம் (ஓமான்), நளாயினி, கமலரஜினி (லண்டன்), ராகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கதிரேசன், அமரநாத் (லண்டன்) ஆகியோரது அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகலட்சுமி, இரத்தினம்பிகை, ஜெயலட்சுமி காலஞ்சென்ற திரு. சீ நடராசா (மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரது அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நவரத்தினம், சின்னத்துரை, காலஞ்சென்ற ராசாத்தினம் ஆகியோரது அன்பு மைத்துனரும், சுனுலட்சுமி, தனுரஜ் ஆகியோரது அன்பு பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் சுதுமலை Dr பசுபதி இல்லத்தில் இருந்து இன்று [2-7-87 வியாழக்கிழமை] காலை 10 மணிக்கு தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி ம. தியாகராசா.

[சி 9660]

### சின்னத்தம்பி இராஜேந்திரம் (இராஜன்)

முன்னாள் மானிப்பாய் பட்டினசபைத் தலைவரும், இராஜன இரும்புத்தொழிற்சாலை (யாழ்ப்பாணம்) உரிமையாளருமாகிய சின்னத்தம்பி இராஜேந்திரம் 28-6 87ல் காலமானார் இவர் சுகுணாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற திரு திருமதி. நா. சின்னத்தம்பியின் Registrar மகனும், Re . கிச்கொக் காலஞ்சென்ற திருமதி கிச்கொக்கின் அன்பு மருமகனும், ராஜினி (Brunei), குணராஜ் Oman). சுவேந்திரணி (U K ), தர்மராஜ் (U. K. , கமலினி (Green Memorial Hospital Manipay) ஆகியோரின் அன்புத்தந்தையும், சரநாதன், நந்தினி, பாலகிருஷ்ணன், மேகலா ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியம் தியாகராஜா, திருமதி நவலட்சுமி நடராஜா, திருமதி யோகேஸ்வரி நமசிவாயம், திரு தம்பிராஜா சிவலோகசுந்தரம், பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தியாகராஜா, நடராஜா, நமசிவாயம், தவமலர், கமலாதேவி, புஸ்பம் ஆகியோரின் மைத்துனரும், பிறேமன், சத்தியன், மதுமிததா, லகஷி, பிறிவீனா ஆகியோரின் அருமைப்பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக (இன்று) வியாழக்கிழமை (2-7-87) காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

"இராஜஸ்தான்",
சின்னத்தம்பி அவனியு,
மானிப்பாய் தெற்கு.

(சி 9661)

# இந்திய நிவாரணப் பொருள் தொடர்ந்தும் கிடைக்கும்

## இந்திய தூதரக அதிகாரி தகவல்

(கொழும்பு)

"காங்கேசன்துறை துறைமுகத்தில் தற்போது இந்திய நிவாரணப் பொருட்களுடன் வந்துநிற்கும் 'பொறுக்கா 2' என்னும் கப்பல் யாழ் குடாநாட்டிலுள்ள மக்களுக்கு இந்திய நிவாரணப்பொருள்களை ஏற்றிவரும் கடைசிக்கப்பலல்ல இந்தியாவிலிருந்து மேலும் நிவாரணப் பொருள்கள் குடாநாட்டு தமிழ் மக்களுக்கு விநியோகிப்பதற்கு அனுப்பிவைக்கப்படும்".

இவ்வாறு இந்தியத் தூதரக அதிகாரியொருவர் இந்திய நிவாரணப்பொருள்கள் யாழ். குடாநாட்டு மக்களுக்கு அனுப்பிவைப்பது தொடர்பாக இலங்கையரசுக்கும் இந்தியாவுக்குமிடையில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து தெரிவித்தார்.

புதுடில்லியிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு பேர்னாட் திலகரத்தின இந்தியாவின் மூன்றாவதுகப்பலான 'பொறுக்கா'வில் கொண்டுவரப்படும் நிவாரணப் பொருள்களுடன், யாழ். மக்களுக்கான இந்திய உணவு, மருத்துவ நிவாரண உதவிகள் முடிவடைவதாக அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும், இந்தியா மேலும் நிவாரணப்பொருள்களை அனுப்பவிருக்கும் நடவடிக்கைகள் குறித்துத் தமக்கு எதுவும்தெரியாதென்றும் இவ்வாறான விநியோகங்கள் குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் கூறினர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளின் கூற்றை மறுத்துரைத்தஇந்திய தூதரகஅதிகாரிகள், தாம் இவ் விநியோகங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும், இருநாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா மேலும் நிவாரணப் பொருள்களை யாழ். குடாநாட்டுக்கு அனுப்பமுடியுமெனவும் தெரிவித்தனர்.

### யாழ்நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழியாக யாழ் கல்வித்திணைக்களத்தை நண்பகல் 12-30 மணியளவில் வந்தடைந்தது.

ஊர்வலத்தில் சென்றமாணவர்கள் சுலோகஅட்டைகளைத் தாங்கியவண்ணமும், கோஷங்களை எழுப்பிய வண்ணமும் சென்றனர்.

### சென்னையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது

இத்தடையுத்தரவு நேற்றைய தினத்திலிருந்து 16ம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## இந்திய நிவாரணப்பொருள் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,வியா.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு அரச நிவாரணப் பொருள்கள் முஸ்லிம் வட்டாரத்திலுள்ள மூன்று கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் நேற்று வழங்கப்பட்டன

இந்த நிவாரணப் பொருள்களை வழங்க அரச அதிபர் எடுத்துக் கொண்ட முயற்சிக்காக அரச அதிபர்.உதவி அரசாங்க அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் கிராம சேவையாளர் மற்றும் யாழ் ப நோ கூ.சங்க நிர்வாகத்தினரையும் யாழ். முஸ்லிம் மக்கள் பாராட்டியுள்ளனர். (வா)

## "இனப்பிரச்னையை தீர்த்துவைக்க இந்தியா பின்வாங்காது"

சென்னை, ஜூலை 1

"சிக்கலடைந்துள்ள இலங்கையின் இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதற்கு இந்திய மத்திய அரசு தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. இம்முயற்சியிலிருந்து 'இந்தியா ஒருபோதும் பின்வாங்கமாட்டாது"

இவ்வாறு காங்கிரஸ் (ஐ) பொதுச்செயலாளர் திரு ஜி. கே. மூப்பனார் நேற்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் "இலங்கைப் பிரச்னையில் இந்தியா மிக நிதானமாகவே நடந்துகொள்ளும் இப்பிரச்னையை சாட்டாக வைத்து இலங்கைக்குள்ளோ அல்லது இந்து சமுத்திரத்திற்குள்ளோ வேறு நாடுகளோ அல்லது வல்லரசுகளோ ஊடுருவல் செய்வதை இந்தியா அனுமதிக்காது இந்தியாவிற்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதில் சில உள்நாட்டு சக்திகளும், வெளிநாட்டு சக்திகளும் ஈடுபட்டு வருகின்றன என்றார். (க)

முன்னாள் நிக்கரவெட்டி எம். பி.

## ஊர்காவற்றுறை தொகுதியில் போட்டியிட விருப்பம்

(கொழும்பு)

இடைத்தேர்தலின் போது ஊர்காவற்றுறை தொகுதியில் போட்டியிட முன்னாள் நிக்கவரெட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. முதியான்சே தென்னகோன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதியில் பதவியிழந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்பும் முகமாக நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் போட்டியிடவே திரு. தென்னக்கோன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் தகவல் தருகையில்; நயினாதீவு நாகதீப விகாரை இத்தொகுதியிலடங்குவதால் தாம் இங்கு போட்டியிட முடிவு செய்துள்ளதாகவும் இன்னும் சில தினங்களில் யாழ்ப்பாணம் செல்லவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் செல்லவுள்ள தமக்கு பாதுகாப்பு தேவையில்லையென்றும் தேவைப்படும் பட்சத்தில் அதனை பெற்றுக்கொள்வதாகவும் ஊர்காவற்றுறை தொகுதி வேட்பாளர் பட்டியல் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறும் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். (சி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ப் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036 81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone: — 22389, 24126.